உ
சிவமயம்

Registered as a News Paper in Ceylon [RBN 9/809-69]

விலை சதம் 15
வருடச் சந்தா :- ரூபா 5

'ஆகமமாகி நின்று அண்ணிப்பான் தாள்வாழ்க'

'வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க'

# சைவ காவலன்

மாதம் இருமுறை வெளிவரும் சைவ வெளியீடு

சௌமிய ஸு தை மீ 19 உ, மாசி மீ 4 உ ஞாயிற்றுக்கிழமை

மலர் 1 | அகில இலங்கைச் சைவ அனுட்டான பாதுகாப்புச்சபை, தெல்லிப்பழை [1-2-70], [15-2-70] | இதழ் 10, 11

## மிகுசைவத்துறை விளங்கும் காட்சி, காரைநகரில்

### காஞ்சிபுரம் தொண்டைமண்டல ஆதீனம் மெய்கண்ட சந்தான குரு மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகளுக்கு

**காரைநகர் மணற்காடு கும்பநாயகி முத்துமாரியம்மன் வழிபடுவோர் சங்க ஆதரவில் நடாத்திய வரவேற்பு விழாவும்! சுவாமிகளின் அருளுரையும்!!**

சௌமிய வருடம் தைமாதம் 10-ந் திகதி (23-1-70) வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் காரைநகர் சைவ மகாசபை மண்டபத்தில் ஷ விழா நடைபெற்றது. அவ்வமயம் பரமாச்சாரிய சுவாமிகள் முத்துப் பல்லக்கில் ஆரோகணித்து வர, பல விதமான விருதுகளுடன் ஊர்வலமாக அழைத்து வரப்பெற்றது. ஷ சபை மண்டபத்தில் நவரத்தின சிம்மாசனமாகிய குருபீடத்திலமர்ந்து முத்தி நிலையென்னும் பொருளமைந்த சிறந்த அருளுரையை வழங்கினார்கள். யாழ்ப்பாணத்தில் இவ்வளவு விமரிசையாய்ப் பரமாசாரிய சுவாமி அவர்களை அடியார்கள் ஏகோபித்த முறையில் உபசரித்தமை வேதநெறி தழைத்தோங்கவும், மிகுசைவத்துறை விளங்கவும், பூதபரம்பரை பொலியவும், மேன்மைகொள் சைவநீதி விளங்கவும், உலகமெலாம் சைவநெறி பிறழாது பாதுகாப்புறவும், அருள் நெறிச் செல்வராக விளங்கும் காரைநகர் தொண்டர் அவர்களுடைய பெரு முயற்சியால் மெய்கண்டார் சந்தானம் பெருகவும், ஞான குருவின் அருளுரையால் சைவ உலகம் வாழவும், கற்றவர்களுடைய புகழ் எங்கும் விளங்கவும அரும்பாடு பட்டுள்ளார். பரமாச்சாரிய சுவாமிகள் யாழ்ப்பாணம் வந்து சைவபபயிர் வாடி வதங்கிய நேரம் சைவ சித்தாந்தமென்ற மழையை வருவித்துச் சைவப்பயிரைத் தழைத்தோங்கச் செய்துள்ளார்கள். சுவாமிகள் வருகை சமண சமயத்தில் மதுரை மாநகரம் மூழ்கியிருந்த சமயம் திருஞானசம்பந்த சுவாமிகள் எழுந்தருளிச் சைவத்தை நிலைபெறச் செய்தமை போலவும், அவர் வருகையின் பொலிவு அன்று இருந்ததுபோல சுவாமிகளை ஞானத்திருவுருபோலவும், நான்மறையின் தனித்துணை போலவும், சித்தாந்த சீலத்தின் தோற்றம் போலவும் யாழ்ப்பாண மக்கள் கண்டு ஆனந்தப் பரவசமடைந்தார்கள். யாழ்ப்பாணத்திலுள்ள சைவ சமயப் பேரவைகளும் சைவப் பெருமக்கள் அனைவரும் ஒருங்கு திரண்டு எதுவித பிணக்குகளுமின்றி யாழ்ப்பாணம் முழுவதிலும் வரவேற்றமை அவருடைய சைவ மாண்பையும் அனுபூதித் திறனையும் எடுத்துக்காட்டுகின்றது. சுவாமிகள் செந்தமிழ் நாடாகிய யாழ்ப்பாணத்தில் தங்களுடைய ஆதீனக் கிளை ஒன்றை நிறுவிச் சித்தாந்த சாத்திரத்தையும், சமயப் பண்பாடுகளைப் பாதுகாத்து வரவும் விரும்பியிருக்கின்றதையும், சைவ சமயத்துக்கு மூலமான சிவஞான சித்தியார் வகுப்பை இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடத்தி சாத்திர அறிவைப் பரவச் செய்தமையும், சமய மரபுகள் அருகிய நேரத்தில் கலாச்சாரமான சமயப் பணபு, கலைப்பண்பு, அனுட்டானப் பண்புகளைப் பூரணமாகிய குருபீடத்திலமர்ந்து நான்மறையினுட் பொருளைச் சித்தாந்தமூலம் ஐயந்திரிபற விளக்கியருளினமை கண்டு யாழ்ப்பாண வைதீகசைவ மக்கள் மிகவும் பெருமிதமடைந்துள்ளார்கள். யாழ்ப்பாணம் அன்று முதலின்றுவரை சமயபாதுகாப்பில் தலைமைப் பீடமாக இருந்து வருகிறது. காலத்துக்குக் காலம சைவப் பெரியார்கள் தோன்றிச் சமய காவல் செய்தும் வருகின்றார்கள். அதையேதான சைவ அனுட்டான பாதுகாபபுச் சபையும் சைவகாவலன் மூலம சைவசமயப் பாதுகாப்புச் செய்து வருகிறது. நாஸ்திகர்கள் வரின் அவர்களை விரைவில வெளியேற்றியும் ஆஸ்திகர்கள் வரின் முத்துச் சிவிகையில் வைத்துத் திருவுலாக் காட்சி காண்பதும் நவரத்தின சிங்காதனமாகிய குருபீடமமைத்து சோடசோபசார வழிபாடு செய்து வருவதும் அன்றும் இன்றும் தவறவில்லை. யாழ்ப்பாணம் சிறிய நாடாகவிருந்தாலும் சங்கம் வளர்த்த மதுரை நகரம் போல என்றும் விளங்கி வர இறைவனாக வந்த மகா சந்நிதானம் பூரண ஆசியுரைகளையும் வழங்கியுள்ளார்கள். வாழ்க நன்மக்கள் வாழ்க என்றும் சைவநீதி வாழ்க உலகெலாம்.

## சமஸ்கிருத அர்ச்சனை நிர்ணயம்

### ஆரியமும் தமிழும்

— சிவஸ்ரீ. ச. குமாரசாமிக் குருக்கள் —

(முற்றொடர்)

#### அத்துவா வடிவம்

இறைவனுக்குக் கருணையாற் கொள்ளும் வடிவமேயன்றி எவற்றுடனும் கலந்து உடனாய் நிற்கும் ஏதுவால் அத்துவாக்களும் வடிவமென்று ஆகமங்கள் உபசரித்து உரைக்கப்படும். சிவபெருமானுக்குச் சாந்தியதீதகலை திருமுடியாகவும், சாந்திகலை திருமுகமாகவும், வித்தியாகலை திருமார்பாகவும், பிரதிட்டாகலை குய்யமாகவும், நிவிர்த்திகலை திருவடியாகவும் அமைந்துள்ளன. இருநூற்றிருபத்து நான்கு புவனங்கள் சிவபெருமானுக்கு ரோமரூபமாக இருக்கின்றன. ஐம்பத்தொரு ருத்திரர்களின் ரூபமானதும் மாதிருகாசத்திகளால் அதிட்டிக்கப்படுவதுமான வர்ணத்துவாதோவாகவும், பதினொரு மந்திரங்கள் இரத்தமாகவும், எண்பத்தொரு பதங்கள் நரம்பும் தசையுமாகவும், முப்பத்தாறு தத்துவங்கள் சுக்கிலம், எலும்பு, நிணம், மூளை முதலிய தாதுக்களாகவும் இங்ஙனம் சிவபெருமானுக்கு ஆறத்துவாக்களும் திருமேனியாக அமைந்துள்ளன.

#### மந்திர வடிவம்

உலகத்துக்கு முதற் காரணம் சுத்த மாயை, அசுத்த மாயையென்பன. அவற்றுள் மேலாகிய சுத்த மாயையில் சிவசத்தி சேர்ந்திருத்தலானும், அச்சுத்த மாயையிலே தோன்றிய காரணத்தினாலும், பயன் கொடுத்தற் பொருட்டுச் சிவசத்தி ஒவ்வோர் மந்திரங்களையும் அதிட்டித்தலாலும், சிவபூசை, பிரதிட்டை, அக்கினி காரியம், முதலியவற்றால் வழிபடுபவர்களுக்குப் போக மோட்சங்களைக் கொடுத்தலாலும் ஆகமங்கள் சிவபெருமானுக்கு மந்திரத் திருமேனியை விதந்து கூறுகின்றன; அவற்றுள்ளும் பஞ்சப் பிரம மந்திரமானது அம்மந்திரங்களுக்கு மூலமானதாலும் பிரதம சிருட்டி ஆரம்பத்தில் முதலிற் றோன்றியதனாலும் ஐந்து மந்திரங்களும் அனுக்கிரகம் முதலிய பஞ்சகிருத்திய சத்தியாதலாலும், சிவபெருமானுக்குத் திருமேனியாக விதந்தெடுத்துக் கூறியது என்றறிக. ஈசானம் முதலிய மந்திரங்கள் சிவபெருமானுக்குச் சிரம், முகம், இருதயம், குய்யம், திருவடி என்பனவாம்.

புதிய கட்சியாளருட் சிலர் சம்ஸ்கிருத மந்திரங்களை மொழிபெயர்த்து அப்பெயர்ப்புக்களைத் தமிழ் மந்திரமெனக் கொள்க என்பர். மந்திரமென்ற பதமே சம்ஸ்கிருதம். நினைப்பவனைக் கரை சேர்ப்பதென்பது அதன் பொருள். அப்பதத்தின் தமிழ்ப் பெயர்ப்புச் சொல்லே இன்னும் காணப்படவில்லை. நிற்க,

"மிக்க வாகமத்தாற் பூசை
விளைந்தெழுந் தொன்றிரண்டு
தக்க நான்கைந் தாறெட்டு
சாமீ ராறிருபத் தெட்டாற்
றெக்கமந் திரங்களாதி பல"

என்னும் ஆன்றோர் வாக்கின்படி காயத்திரி, அம்ச. பஞ்சப் பிரமம், ஷடங்கம், பிராசாதம், சப்தகோடி, சுவா, ஆசமனம், பீசம். அட்டோத்தரசதம், சகச்

(7-ம் பக்கம் பார்க்க)

★ இலங்கையில் வைதீக சைவத்தைப் பேணி வளர்க்கும் ஒரேயொரு சைவப் பத்திரிகை ★

உ
திருச்சிற்றம்பலம்



நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்அடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே.

— தேவாரம்.


# சைவ காவலன்

சௌமிய ஸ்ரீ தை மீ 19 உ, மாசி மீ 4 உ

மலர் 1] அகில இலங்கை [இதழ் 10, 11

சைவஅனுட்டான பாதுகாப்புச்சபை, தெல்லிப்பழை.


## புரியாத புதிர்

காலாகாலத்தில் எங்கள் நாட்டுக்கு எத்தனையோ அறிஞர்கள் வருகிறார்கள், போகிறார்கள். முதலில் வரவேற்பும் முடிவிற் பிரியாவிடையுமாக அவ்வருகைகள் நிறைவெய்துகின்றன. வந்தவர்கள் நம்மவர்கள் உள்ளங்களில் எதனைத் தங்கவைத்துப் போகிறார்கள் என்பது சிந்தனைக்கு முன்னிற்காத விஷயமாய்ப் போய்விடுகின்றது. இலவங்காய் வெடித்தற்கும் இவர்கள் வந்துபோவதற்குமிடையில் அதிகம் வேறுபாடிருப்பதில்லை.

தமிழ்த் தாகமும் சைவ நேயமும் மிகுந்த இந்நாட்டில் அவற்றின் பெயரால் வருபவர்களிற் கூட உண்மையில் தமிழுணர்வையோ சைவத்தின் உயிரையோ தொட்டுவிட்டுப் போகிறவர்களைக் காணுதல் அருமை; கார்த்திகைப் பிறை கண்டாற் போலத்தானிருக்கின்றது.

இந்நிலையில், அதிர்ஷ்டவசமாக, காஞ்சீபுரம் மெய்கண்டார் சந்தான பரமபரையைச் சார்ந்த சிவத்திரு. சீலஸ்ரீ ஞானப்பிரகாச சுவாமிகள் கடந்த இரண்டு மாதங்களாக இந்நாட்டில் தங்கியிருக்கும்பேறு குறிப்பிடத்தக்க அளவு முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

தமிழறிவு, சைவ ஞானம் இரண்டையும் சரி சுத்தமாகப் பார்க்கில் சுவாமிகளிடத்திலேயே பார்த்தல் கூடும். சிவபூசை நேர்மையும் சிவத்தியானப் பற்றும் அவர்களுக்கிருக்குமளவு ஆர்க்கும் அமைதல் இலகுவன்று. தமிழ்க்கியல்பான தண்மை, மென்மைச் சாயல்களும் சைவத்துக்கியல்பான சாந்த அமைதிப் பண்புகளும் சுவாமிகளிடத்திற் சுவரூபித்திருக்குமளவு சாதாரணமானதாகாது. அவர்தம் உருவும், திருவும், உள்ளக் கனிவும், ஒழுகலாறும், உண்மையோடொட்டி நிற்கும் அவர்தம் நேர்மை, சீர்மைகளும் தமிழ்க் கலாசார மலர்ச்சியைத் தத்ரூபமாகச் சித்திரிக்கும் பெற்றியன.

கடலமுதெடுத்துக் கரையில் வைத்ததுபோல், திருமுறைக் கருத்துக்களைத் துருவித் துருவிச் சித்தாந்தபரமான தெய்வீக உண்மைகளைச் சுவாமிகள் தெரித்துக் காட்டும் திறம் வியத்தற்குரித்து. எல்லாவற்றினும் மேலாக, திருமுறைப் பாடல்களை உள்ளன்பின் உருக்கத்துடனே உணர்ந்துணர்ந்து சுவாமிகள் இதம்பட ஓதும் நயம் உணர்வின்பப் பெருக்கினை விளைவிக்கும். எல்லா வகையாலும் எண்ணுங்கால், துல்லியமான சைவத் தமிழுள்ளங்களுக்குச் சுவாமிகள் ஒரு சுவைப் பொருள் என்றல் பொருந்தும்.

இந்நாட்டின் பல பகுதிகளிலும் சுவாமிகளுக்கு மங்கலகரமான வரவேற்புகள் தெய்விக சோபையுடன் நிகழ்ந்துள்ளன. அண்மையிற் காரைநகரில் இடம்பெற்ற மகத்தான வரவேற்பு யார்க்கும் மறைபொருளாயிருந்திருக்க முடியாது. நாட்டின் பல பகுதிகளிலும் அவர்தம் சொற்பொழிவுகள் சுவைக்கப்பெற்றுள்ளன. அவர்கள் நடத்திய சித்தாந்த வகுப்பின் சிறப்பினைத் தற்செயலாகக் கண்டவர்களும் அதில் தம்மை ஈடுபடுத்திக்கொண்ட சம்பவங்கள் பல. தற்பொழுது சுவாமிகள் நாட்டின் தலைநகரிலேயே தங்கியிருக்கின்றார்கள்.

இவ்வளவு மிருந்தும் இவைபற்றி எங்கள் தினசரிகள், விஷயத்தின் தரத்திற்கேற்ப எதுவும் வாய் திறப்பதாகத் தோன்றவில்லை. சுவாமிகளுக்குப் பிரசித்திக்காகவோவெனின் அதற்கன்று; தங்களாற் சேவிக்கப்படும் பரந்த சமுதாயத்திற்காக; அச்சமுதாயத்தின தேவைக்குத் தகுதியான ஒருவரைச் சந்திக்கும் ஒரு வாய்ப்பிருப்பதை எடுத்துக் காட்டுதற்காக; அவர்தம் உண்மை நிலையைச் சைவத் தமிழ் மக்கள் கண்முன படைப்பதற்காக அத்தினசரிகள் வாய் திறந்ததில்லை. இது ஏனோ?

இதனை உண்மையென உற்றுணர்ந்து உள்ளவாறு தெரிவிக்கும் நிருபர்களில்லாக் குறையோ? இவையெல்லாம் எதற்கென்னும் விரக்தியோ? சைவமுந் தமிழும் தமக்கன்னியமென்னும் பேதவுணர்வோ? தாம் வேண்டியது முடித்தற்கு இது குந்தகமாய்விடும் என்பது பற்றிய ஒஞ்சிப்போ? கண்டுங் காணாதிருத்தல் என்னுங் கண்மூடி வழக்கப் பயிற்சி மிகுதியோ யாது பொருந்துமோ; ஏதுமறியோம!

இது இன்னும் புரியாத புதிராகவே யுள்ளது.

## சித்தாந்தச் செந்நெறி

பண்டிதர் மு. கந்தையா, ஏழாலை

— முற்றொடர் —

விசிஷ்டாத்வைதக் கொள்கையின் பிரகாரம் ஆராய்ச்சிக்குரிய பொருள்கள் ஆறு. அவை திரவியம் என்ற பெயராற் குறிக்கப்பட்டு ஜடம், அஜடம் என இரு பிரிவிலடங்கும். பிரகிருதி, காலம் என்னும் இரண்டும் ஜடம் எனவும்; தர்மபூதஞானம், நித்திய விபூதி, சீவன், ஈஸ்வரன் என்னும் நான்கும் அஜடம் எனவும் வகுக்கப்படும். அவற்றின் இயல்புகள் வருமாறு:-

**பிரகிருதி:** உயிரும் அதன் சார்பாக ஈஸ்வரனும் தங்குவதற்கு இடமாயிருப்பது பிரகிருதி. இதன் ஒவ்வோரம்சமும் ஈஸ்வரன் வியாபகத்தினாலும் பிரபாவத்தினாலும் பரிமளித்துக் கொண்டிருக்கின்றது. சாங்கிய மதத்தார் கொள்ளும் பிரகிருதி யிலக்கணத்தோடு ஒப்புநோக்கி விசிஷ்டாத்வைதங் கொள்ளும் பிரகிருதி யிலக்கணத்தை அறிதல் விசேடமாகும். சாங்கிய மதத்தின் பிரகாரம் சத்வம், ரஜஸ், தமஸ் என்ற குணங்கள் மூன்றும் அம்சங்களாயிருப்ப அவற்றின் கூட்டுப் பொருள்மயமாயிருப்பது பிரகிருதி எனப்படும். ஆனால், விசிட்டாத் வைதத்தில் முக்குணங்கள் பிரகிருதியின் அம்சங்களாய், பிரகிருதியோடு சேர்ந்திருப்பனவாயினும் அதிலிருந்து வேறுபடத் தோன்றும் தன்மையனவாய் இருக்கும் என்ற கருத்து நிலவுகின்றது. சாங்கியத்தில் பிரகிருதி எல்லை முடிவற்ற ஒன்றாகக் கொள்ளப்படும். இங்கு அது 'நித்ய விபூதி'யினால் எல்லைபபடுத்தப் பட்டதாகக் கொள்ளப்படும். சாங்கியத்தில் பிரகிருதி எவ்வகையிலும் 'புருஷன்' என்ற தத்வத்தில் தங்கியிருப்பதில்லை. அதாவது, புருஷன் வேறாயிருக்கும். பிரகிருதி வேறாயிருககும. விசிஷ்டாத் வைதத்தில் அது புருஷனால் அதிட்டிக்கப்படுவதா யிருக்கின்றது. அவ்வகையில் புருஷனுக்கும் பிரகிருதிக்கு மிடையிலும் அந்த 'அப்றுதக் சித்தி' (பிரிப்பற்ற நிலை) நிலைபெறுகின்றது. இவ்வகையில் விசிட்டாத் வைதங் கொள்ளும் பிரகிருதியிலக்கணம், சாங்கியங் கொள்வதிலும் பார்க்க விசேடமுடையதாய்ச் சைவசித்தாந்தங் கொள்ளும் பிரகிருதி யிலக்கணத்தோடு ஓரளவில் ஒப்புமையுடையதாய் அமைகினறது. பிரகிருதியிலிருந்து குணதத்துவங்களும் பிறவும் தோறறும் முறை சாங்கியத்திலுள்ளவாறே விசிட்டாத் வைதத்திலுங் காணப்படுகின்றது.

**காலம்:** விசிட்டாத் வைதத்தில் காலம் உள்பொருள் ஆகும். இது முழுமுதற் பொருளின் வேறாக உள்ளதன்று. எனினும், ஈஸ்வரன் இதிற் கட்டுப்படுதலில்லை. ஈஸ்வரனுணைக்குக் கீழ்ப்பட்டே காலம் இயங்கும். சாங்கியங் கொள்வது போல அது பிரகிருதியின் ஒரு விகாரமோ அல்லது அம்சமோ என்னும்படி உள்ளதும் அன்று. காலம் பிரகிருதிக்குத் தோழன் போல இருந்து மாற்றங்கள் நிகழ்வதற்கு உபகாரியாயும், தானும் மாற்ற முறுவதாயுமுள்ளது. காலம்பிரகிருதியோடு ஒத்த தோற்றமுடையது. எது முன்னையது என்று சொல்வதற்கில்லை. இக்காலம் வருடம், மாசம், நாள் முதலியனவாகப் பிரிந்து உலக வியவகாரத்துக்கு உதவுகின்றது.

**தர்மபூதஞானம்:** ஈஸ்வரனைப் போலவே ஜீவனும் அறியுந் தன்மையுள்ளது. உயிரில் இயல்பாகவேயுள்ள ஞானம் மனத்தினூடாக மற்றும் அந்தக்கரணங்களினுதவியுடன் பொருளைச் சென்று பற்றுகையில் அறிவு நிகழ்கின்றது. இவ்வறிதல் முயற்சி உயிரின் முயற்சியே. அது மனத்தினூடாகக் கிளம்பி இந்திரியங்களின் வாயிலாகச் சென்று வெளியுலகப் பொருள்களைச் சாரும் போது அவற்றின் உருவத்தைப் பற்றி, அவ்வப் பொருளுணர்வை உயிர்க்கு ஏற்படுத்துகின்றது. இவ்வகையில் இத் தர்மபூதஞானம் என்பது கேவலாத்து விதிகள் கூறும் அந்தக்கரண விருத்தி என்பதனோடொக்கும். ஆனால், கேவலாத்து விதிகளின் கருத்தில் அந்தக்கரண விருத்தி ஜடம். ஆதலினால், அதை ஞானமாக மாற்றுவதற்கு அதற்கு வேறாக உள்ள சாக்ஷி என்ற ஒரு தத்துவம் வேண்டப்படுகின்றது. விசிட்டாத்து விதிகள் கருத்தில் ஞானமென்றால், ஞானமேதான். அதற்கு மற்றோர் வெளியுதவி வேண்டப்படுதலில்லை. இங்ஙனம் உயிரிடத்தில் தோன்றுமளவிலேயே அது ஞானமெனில் மன முதலிய அந்தக்கரணங்களும் இந்திரியங்களும் எற்றுக்கெனில், தோன்றும் ஞானத்தை, இது நிறம் பற்றியது, இது ஒலி பற்றியது என இங்ஙனம் நிச்சயிக்குமளவுக்கேயாம். இத் தர்மபூத ஞானம் அறிவென்ற அளவில் அமைவதன்று, அறிவினுள்ளீடாகவுள்ள விருப்பு வெறுப்புக்களையும் உள்ளடக்குவதாகும்.

அறிவைப் பற்றி விசிஷ்டாத்வைதம் தர்க்கரீதியாக அளிக்கும் விளக்கங்கள் மிக விஸ்தாரமானவை. உண்மையில் இல்லாத பொருள்களும் உள்ளனபோல அறியும் அறிவுநிலை ஒன்று இருக்கின்றது. அது மித்தை எனப்படும் என முன்னைய தத்துவ ஞானிகள் சிலர் (கேவலாத்து விதிகள் முதலியோர்) கொண்ட கொள்கையொன்றிருத்தல் பிரசித்தம். அதன் பொருந்தாமையை ஆராய்ந்து உண்மையை நிறுவும் முகமாகவே விசிட்டாத்வைதத்தில் அறிவு பற்றிய இவ்வாராய்ச்சி விஸ்தரிக்கப்பட்டுள்ளதெனக் கொள்ளவேண்டியிருக்கின்றது. இத்தத்துவ ஆராய்ச்சியின் பிரகாரம், எந்த நிலையில் அறிவு நிகழ்ந்தாலும் அந்த அறிவுக்கு முன்னிலையான பொருள் எவ்வகையிலும் உள்பொருளே என்பது முடிந்த முடிபாகும். ஆதலினால், அறிவு நிகழ்ச்சி முற்ற முடிய அறியப்படும் பொருளின் உளதாந் தன்மையைப் பொறுத்ததேயன்றி, அறியும் பொருளின் அதாவது, உயிரின் அவித்தை முதலிய ஏதுக்களைப் பொறுத்ததன்றும். இவ்விளக்கத்தின் மூலம், **'அவித்தை காரணமாகப் பிரமமே உலகமாகத் தோன்றும்'** என்பது போன்ற கொள்கைகள் அடியோடு மறுக்கப்பட்டொழியும். "யதார்த்தம் சர்வ விஞ்ஞானம் இதி வேதவிதாம் மதம்"—அறிவு முழுவதும் உள்பொருள் அறிவே என்பது வேதமறிந்தோர் கொள்கை—என்பது மேற்கோள். உலகம் என ஒன்று இருப்பதாக உயிர் அறிகிறதெனில்,

(6-ம் பக்கம் பார்க்க)

# வித்தியாரம்பம் பாடசாலையில் முதல் நாள் அனுபவம்

அத்தியாயம் 2.

[வித்தியாரம்பம்; முதல் நாள் பாடசாலைக்குப் புறப்படும்போது எனக்கு இருந்த மனோநிலை; பாடசாலையைப் பற்றிச் சில குறிப்புகள்; தானியேல் உபாத்தியாயர், நமசிவாயம் உபாத்தியாயர், தங்கம்மா உபாத்தியாயினி முதலியோரின் குணாதிசயங்கள்; தானியேல் உபாத்தியாயரின் போதனையும், அவர் பிள்ளைகளின் நெற்றியில் இருக்கும் திருநீற்றை அழித்தலும்]

எனக்கு ஐந்து வயது ஆனபோது முறைப்படி வித்தியாரம்பஞ் செய்தார்கள். வீட்டிலிருந்தே, என் தந்தையாரிடம் தமிழ் நெடுங்கணக்கில் உள்ள எல்லா எழுத்துக்களையும், எண்களில் நூறு வரைக்கும் உள்ள இலக்கங்களையும், வாய்பாடாகச் சொல்லவும், எழுதவும் சில வாரங்களுள் படித்துக் கொண்டேன். இதில் எனக்கு அதிக கஷ்டம் ஏற்படவில்லை. பின்னர், ஒரு சுபதினம் பார்த்து, அன்றைக்குப் பள்ளிக்கூடத்திற் கொண்டுபோய்ச் சேர்ப்பதற்கு ஒழுங்குகள் செய்தார்கள்.

எல்லாம் ஆயத்தமாய் விட்டன; பள்ளிக்கூடத்திற்குப் புறப்பட நேரமும் கிட்டி விட்டது. பொன்னியிடம் இருந்தும் மற்றும் பிள்ளைகளிடம் இருந்துங் கேள்விப்பட்ட அளவில், பள்ளிக்கூடத்தை நினைக்க யமலோகம் போல இருந்தது. எப்படி இருந்தாலும் போகவேண்டியிருந்த படியால், ஏட்டையும் எடுத்துக் கொண்டு ஐயாவுடன் புறப்பட்டேன்.

அரை மைல் தூரம் வரையில் நடந்தபின், ஓர் இரைச்சல் என் காதுக்கு எட்டியது. நான், "இதென்னையா — இரைச்சல்?" என்று கேட்டேன். "அது பிள்ளைகள் படிக்கும் சத்தம்" என்று ஐயா பதில் உரைத்தார். பள்ளிக்கூடம் கிட்டி விட்டதென ஊகித்துக் கொண்டு, "ஐயா எனக்கு அடிக்கவேண்டாம் என்று சட்டம்பியாரிடம் சொல்லுங்கோ" என்று திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டு நடந்தேன்.

சொற்ப நேரத்துக்குள் நாங்கள் பாடசாலை வாயிலை அடைந்தோம். நான் வாயிலிற் கால் வைத்ததும் எல்லாப் பிள்ளைகளும் அப்படியே மழை விட்டதுபோலத் தங்கள் கூச்சலை நிறுத்தி, இமை கொட்டாது என்னைப் பார்த்தார்கள். நான் திகைத்து ஓர் ஸ்தம்பம் போல நின்றேன். ஐயா என்னை மெல்லக் கையிற் பிடித்துக் கொண்டுபோய், ஓர் நாற்காலி நிறைய உட்கார்ந்திருந்த ஒரு பெருத்த மனிதர் முன் நிறுத்தினார்.

இவர்தான் தலைமை உபாத்தியாயர் தானியேல் (Danial) என்று பின் அறிய வந்தேன். இவர் ஐயாவைக் கண்டவுடன் எழுந்து, "ஓ! எங்களுடைய ஓவசீயர் போல இருக்கு. ஏது இந்தப்பக்கந் திரும்பினது? வாரும், வாரும், இப்படி இரும்" என்று முகமன் கூறி, தன் அருகில் இருந்த நாற்காலியில் ஐயாவை இருக்கச் செய்து, பின் தானும் உட்கார்ந்தார். பின்னர் என்னை யார் என்று ஐயாவிடம் விசாரித்து விட்டு, என்னை நோக்கி, "நீ ஏதாவது எழுத வாசிக்கப் படித்திருக்கிறாயா.........?" என்று உறுமிக்கொண்டு பார்த்தார்.

அந்தப் பார்வை ஒன்றே என்னை நடு நடுங்கச் செய்து விட்டது. உண்மையாக இதற்குப் பின்னர் எத்தனையோ நாட்கள் கனவிலே கூட இவருடைய நரைத்த மீசையையும், இரத்தக் கண்களையுங் கண்டு திடுக்கிட்டு எழுந்திருக்கிறேன்.

அவர் கேட்ட கேள்விகளுக்கு நான் கொடுத்த மறுமொழியில் இருந்து எனக்கு எழுத வாசிக்கத் தெரியும் என்று அறிந்து, அதைப் பரீக்ஷிப்பதற்காக என்னுடைய ஏட்டைக் கொடுக்கும்படி கேட்டார். நான் அவரையே பார்த்துக்கொண்டு ஏட்டைக் கொடுக்குமாறு, மரியாதையாக இரண்டு கைகளையும் நீட்டினேன். அவர் கோபமேலீட்டினால் தன் தடித்த புருவங்களை உயர்த்திக் கொண்டு, "என்ன! என்னுடனா பரிகாசஞ் செய்கிறாய்? மெத்த நல்ல காரியம். ஏட்டைக் கேட்க வெறுங் கைகளையா நீட்டுகிறாய்?" என்று அதட்டினார். நான் அப்பொழுது கையைப் பார்த்தேன். கையில் ஏட்டைக் காணவில்லை. நிலத்தைப் பார்த்தபொழுது, ஏடு என் காலடியில் இருக்கக்கண்டு எடுத்துக் கொடுத்தேன். "இந்தப் பாதக மனுஷன் பார்த்த பார்வையினாலே இது என்னை அறியாமல் என் கையில் இருந்து வழுவி இருக்கவேண்டும்" என்று பின்னர்தான் உணர்ந்தேன்.

இப்படியாக இன்னுஞ் சில கேள்விகள் கேட்டு என்னைச் சோதித்த பின், ஐயாவைப் பார்த்து, "ஓவசீயர்! — உம்முடைய மகள் மெத்தக் கெட்டிக்காரி காணும். நான் பிள்ளையை அரிவரி வகுப்பில் விட்டு மினைக்கெடுத்தாமல், இப்போதே முதலாம் வகுப்பிற் சேர்க்கிறேன்" என்று சொல்லிக் கொண்டு, தனக்கு முன்னே இருந்த மேசையில் வைக்கப்பட்டிருந்த கொப்பிப் புஸ்தகத்தில் ஏதோ எழுதினார். அவர் எழுதும்போது, அவருடைய மயிரடர்ந்த கையையும், மேசையின் மேல் இருந்த நெடிய பிரம்பையும் பார்த்துப் பார்த்து நான் குறு வியர்வை வியர்த்த வண்ணம் நின்றேன்.

எழுதி முடிந்தவுடன் அவர், "செல்லம்மா! இங்கே வா" என்று என்னுடைய யாரிப் பெண்பிள்ளை ஒருத்தியைக் கூப்பிட்டு, "இன்றைக்கு இது உங்கள் எல்லோருக்கும் ஒரு கூட்டாளியாக வந்திருக்கிறது; கூட்டிக்கொண்டு போய் உன் வகுப்பில் இருத்து" என்றார்.

செல்லம்மா அப்படியே செய்தாள். நான் வகுப்புக்குப் போகும்போது ஐயா என்ன செய்கிறார் என்று திரும்பிப் பார்த்துப் பார்த்துப் போனேன். ஐயா தலைமை உபாத்தியாயருடன் ஏதோ மெதுவாகப் பேசிவிட்டுக் கடைசியாக, "அப்போ — நான் போய் வரட்டுமா, உபாத்தியாயர்?" என்று

(5-ம் பக்கம் பார்க்க)

## திரிலோகசஞ்சாரி

தொண்டர், காரைநகர்

தேவர்கள் – என்னப்பா நாரதரே? என்ன, இவ்வளவு நாளாக எங்கே போயிருந்தீர்கள்?

நாரதர் – பூலோகத்திற்குப் போயிருந்தேன். இப்ப அங்கே ஏராளமான வேலை. அதனாலேயே சமூகந்தர முடியவில்லை.

தே. – ஆமா, அப்படியென்ன பிரமாதமான வேலை?

நா. – என்ன விளங்காதவர்கள் போலக் கேட்கிறீர்களே?

இப்ப சமயநிலைகள், ஆசார அனுட்டானம் குறைந்து வேதாகமங்கள் கற்போரின்றி அதனால் வேள்விகள், யாகங்கள் இயற்றுவாரின்றிப் போவதும், நடைபெற்றாலும் எப்பயனும் கிடையாது.

தே. – அவ்வளவுக்குக் கெட்டுப் போச்சுதென்று கூறுகின்றீர்களா?

நா. – கெடாமலென்ன வேதாகமம் படித்தால் போதாது அனுபவமும் வேண்டும். அப்படியானவர்களுக்கேதான் மேற்சொன்ன கருத்துக்கள் விளங்குமப்பா?

தே. – ஆமா! ஆமா! இப்ப புரியுது. பூலோகவாசிகள் சுத்த மாயாகாரியமான பதித்துவம் குன்றி அசுத்த மாயாகாரியமான பசுத்துவங்களிலே கருவி கரணங்களைச் செலுத்துகிறார்கள்.

நா. – சமய சாத்திரமானது குருமுன்னிலையில் ஒழுக்கமாக விருந்து பலகாலம் கேட்டுத் தெளிய வேண்டியவை. செய்து பழக வேண்டியவை. அப்படியிருக்க முறைப்படி பாடம் கேளாமல், செய்யாமல் சபைகளில் பேசலாமா? பேசினாலும் மதிப்பார்களா? இல்லவே இல்லை.

தே. – நாரதரே! இதனாலே தானோ, இந்தச் சாத்திரத்தைப் புறக்கணிக்கிறாங்க. இவ்வளவு துவேஷமும், வெறுப்பும் காட்டுறாங்க.

நா. – யாழ்ப்பாணத்திலே பழமைகள், வைதீகமுறைகள் பாதுகாத்து வரப்படுகின்றன. தாயுமான சுவாமிகளும் பாதுகாப்பாக ராசாங்கத்து அமர்ந்தது வைதீக சைவம் என்றமை காண்க.

தே. – இதனால்தானோ, அ. இ. சை. அ. பாதுகாப்புச் சபையார்கள் குன்றக்குடியடிகளார் வந்தபோது வரவேற்பளிப்பதற்குப் பதிலாக வெளியேற்றுப் பாடி அவர்களை அனுப்பியதும், காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதீனம் மெய்கண்டதேவ சந்தானம் வந்தபோது விருதுகளுடன வரவேற்பும் உபசாரமும் அபாரமான முறையில் வழங்கியதும், வைதீகச் சைவர்களுக்கு மதிப்பும், அப்படியல்லாதவர்க்கு மதிப்புக் கொடாமையும் கண்டோம்.

நா. – அப்படிச் செய்ய வேண்டியது முறைதானே. காஞ்சிபுரம் ஆதீனம் அவர்களோ சோபான முறைப்படி மெய்கண்ட சாத்திர மேதை, சுருதி, யுத்தி, அனுபவம் ஆகிய மூன்றும் முறையேயுடையவர். திருவருள் நிறையப் பெற்றவர். தான் பெற்ற தெள்ளமுதை மற்றையோரும் பருகும் வண்ணம்; யாழ்ப்பாணத்தில் இந்துக் கல்லூரியில் மெய்கண்ட சாத்திரமாகிய சிவஞானபோத வழியைச் செய்யும் சிவஞான சித்தியை முறையாக அள்ளி வழங்கினார்கள். அன்பர்கள் தேனமுதை விழுங்கினார்கள். இப்படியான ஓர் அற்புதக் காட்சியையும் அவருடைய பழமையையும் பார்த்தும், கேட்டும் வரவே தானப்பா சிலநாட்கள் சுணங்கியது.

(தொடரும்)

### அகில இலங்கை சைவ அனுட்டான பாதுகாப்புச் சபையின்

## நிர்வாகசபையின் தீர்மானங்கள்

சென்ற நிர்வாகசபைக் கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்களாவது :—

சைவ சமயத்தைப் பேணிக் காப்பதற்குக் கீழ்க்காணும் எட்டுக் கோரிக்கைகளை இச்சபை அரசாங்கத்துக்கும் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் சமர்ப்பிக்க வேண்டுமெனச் சபையோர் ஏகமனதாகத் தீர்மானித்தனர்.

(1) பாடசாலைகளில் சைவ சமயக் கல்வி சைவ உயர் பீடத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர்களைக் கொண்டு கற்பிக்கப்படல் வேண்டும்.

(2) சைவப் பள்ளிக்கூடங்களில் சைவ ஆசிரியர்களே கடமையாற்ற வேண்டும்,

(3) பத்திரிகைகள், சஞ்சிகைகளில் ஆபாசக் கட்டுரைகள், படங்கள் முதலியன பிரசுரிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

(4) படமாளிகைகள் இரவில் 9.00 மணிக்கு மூடப்படல் வேண்டும்.

(5) சினிமாப் படங்களைப் பார்வையிட்டுத் தணிக்கை செய்யும் குழுவில் எல்லாச் சமயப் பிரதிநிதிகளுமிருத்தல் வேண்டும்.

(6) சைவ சமயத்தைப் பற்றிய எவ்வித சட்டத்தையும் அரசாங்கம் இயற்ற முன்வரக் கூடாதென இச்சபை வேண்டிக் கொள்ளுகின்றது.

(7) சமூகச் சீர்திருத்தச் சட்டத்திலுள்ள சைவ சமயத்தைப் பாதிக்கும் சரத்துக்களை நீக்க வேண்டும்.

(8) யாழ்ப்பாணத்தில் ஓர் இந்து பல்கலைக் கழகம் காலதாமதமின்றி நிறுவ வேண்டும்.

# மஹாசிவராத்திரி விரதம்

வேதாகமபூஷணம் பிரம்மஸ்ரீ கு. பாலசுந்தரக்குருக்கள் (B. A. Lond.)

"மஹா சிவராத்திரி" அல்லது மகாதேவனுக்கு மஹிமை பொருந்திய இரவு உலகெங்கணும் சிறப்பாக ஹிமாசலம் முதல் தேவேந்திர முனை வரை கொண்டாடப்படும் பெருவிழாவாகும்.

ஸ்காந்த புராணத்துச் சிவரகஸ்ய கண்டத்தில் நான்கு வகையான சிவராத்திரிகள் விதந்தோதப்படுகின்றன. (1) அமாவாசையுடன் கூடிய சோமவாரம். இது நித்திய சிவராத்திரி எனப்படும். (2) மாதந்தோறும் அமாவாசைக்கு முதலிரவு; இது மாத சிவராத்திரி எனப்படும். (3) மாக சிவராத்திரி: இது மகா (மாசி) மாசத்துக் கிருஷ்ண பக்ஷத்துச் சதுர்த்தசியன்று நிகழும். இத்தினத்தை அநுட்டிப்பதற்கு அபரபக்கத்துப் பிரதமையிலிருந்து சதுர்த்தசிவரை சில விசேட நியமங்கள் விதிக்கப்பட்டுள்ளன. (4) மஹாசிவராத்திரி: இது மாசி மாதத்து அமாவாசைக்கு முதனுள் அநுட்டிக்கப்படுவது.

பெரும்பாலும் சிவபிரானுக்குச் சிறப்பாகக் கொள்ளப்படும் விரத நாட்களில் உபவாசமும் யாமந்தோறும் சிவலிங்கப் பெருமானுக்கு அர்ச்சனையும் விதிக்கப்படும்.

மகாசிவராத்திரி விரதத்தினுடைய மான்மியத்தையும், அது குறிக்கும் வரலாறுகள், தத்துவக் கருத்துக்கள் என்பவற்றையும் இக் கட்டுரையில் ஆராய்வாம். அதற்குப் பீடிகையாக இச் சொற்றொடரின் கணுள்ள **மஹா — சிவ — ராத்திரி — விரதம்** என்னும் நான்கு சொறகளையும் ஆராய்வது நன்மை பயக்கும்.

## சிவன்

'சிவ' என்னும் சொல்லை நாம் உண்மையாகவும், பூரணமாகவும் அறிவது மிகமிகக் கடினமானது; ஓரளவு அறிவோமெனின், அஃதும் அவனருளாலேதான் முடியும். சுருங்கக்கூறின் அவனை அறிதல் என்பது அவனைக் காண்டலோடு ஒக்கும். உண்மையில் அவனைப் பற்றி நாம் விசாரணை செய்வதற்கு 'சிவ' என்னும் சொல்லின் இலக்கணக் கருத்தை முதலில் ஆராயவேண்டும்.

ஸேதே (ஜகத்ஸர்வம்) யஸ்மின் ஸ சிவ. சம்புர்விகாரரஹிதர்: (இ+ள்) "விகாரமற்ற ஆத்மாவாகிய எவனிடம் அனைத்துலகும் தங்கியுள்ளதோ அவனே சிவன்" என்பதாம்.

பாபங்களையும், துன்பங்களையும் அழிப்பவன்; ஆதலால், சம்சார பாரத்தினுல் களைப்புற்றிருக்கும் எல்லா ஆன்மாக்களுக்கும் தஞ்சமாய் விளங்குபவன். மேலும் அவன்

"ஈசான : சர்வ-வித்யானும்
ஈஸ்வர : சர்வ-பூதானும்.

(இ+ள்) அவன் சகல கலைகளுக்கும் இருப்பிடம். அண்டங்களனைத்துக்கும் தலைவன். இத்தகைய பெருமகனை உருத்திரன், சிவன், சிவதரன், சங்கரன் என்றெல்லாம் யஜுர்வேதம் போற்றும்.

சிவ என்னும் பதம் மங்கலத்தைக் குறிப்பது. சிவம், பத்ரம், கல்யாணம், மங்களம், சுபம் என்பன ஒருபொருட் கிளவிகள் என்பர் 'அமரகோச' நிகண்டார்: கல்யாண குணங்களைத் தன்னகத்தே கொண்ட 'சிவ' என்னும் பதம் உலக பாசங்களிலிருந்து விடுவிப்பதற்குரிய ஒரு முக்திவாசகமாம். ஒருவன் தாங்கொணுத் துயரில் மூழ்கியிருக்குங்கால் சிவ நாம உச்சாரணமே அவனுக்கு ஆறுதலளிக்கவல்லது.

'சிவ' என்னும் பதத்திலுள்ள ஈரெழுத்துக்களும் எத்துணைச் சிறப்பு வாய்ந்தவை என்பதைப் பின்வரும் சுலோகத்தினுல் அறியலாம். (பிரமவைவர்த்த புராணம். அத். 6)

பாபக்நே வர்த்ததே சிஸ்ச
வஸ்ச முக்திப்ரதே ததா |
பாபக்னே மோக்ஷதோ நருணாம்
சிவஸ்தேன ப்ரகீர்த்தித : ||

(இ+ள்) சிகாரம் பாபநாசத்தைக் குறிக்கும்.

வகாரம் உலகியல் பந்தங்களிலிருந்து விடுதலையைக் குறிக்கும். எனவே, பாபங்களைக் கழுவுவதனுலும், நித்தியானந்தப் பெருவாழ்வைக் கொடுப்பதனுலும் அவன் 'சிவன்' எனப்பட்டான்.

## "ராத்திரி" யின் பொருள்

இனி 'ராத்திரி' என்னும் சொல்லை ஆராய்வோம். இது 'ரா' (கொடு) என்னும் வினை முதலையுடையதாய் சாந்தியையும் சந்தோஷத்தையும் கொடுப்பது என்னும் பொருளையுடையது. இவ்வுண்மை இருக்கு வேதத்து பத்தாம் மண்டலத்து 127-ம் சூக்தத்து, 7-ம் செய்யுளால் விளங்கும். "ராத்திரிசூக்தம்" என்னும் அச்சூக்தத்திலே இரவான அமைதியையும் ஆறுதலையும் அளிப்பதென்பதும் நாள்முழுவதும் வேலை செய்து களைத்தவர்களுக்கு ஓய்வையும் புத்துணர்ச்சியையும், அளிக்கவல்லதென்பதும் கூறப்படுகின்றது. எனவே, 'ரா' (கொடு) என்னும் வினையடியிலிருந்து தோற்றியது சாலவும் பொருத்தமே. மேலும், இச் சூக்தம் சிவனது சத்தியாகிய துர்க்காதேவியை ஏத்துவதொன்றும். எனவே, 'சிவ-ராத்திரி' என்னும் சொற்றொடருக்கு முத்தியைக்கொடுப்பதென்பதும், சிவசம்பந்தமுடையதென்பதும் பெயர்.

சொற்களையும் அவற்றின் தத்துவார்த்தங்களையும் ஆராயும் மாணவர்க்கு இச்சொற்றொடர்களின் அழகும், ஆழமும், சிறப்பும் நன்கு விளங்கும். 'ராத்திரி' என்னும் சொல் சாதாரண இரவைக் குறிப்பதன்று. ஆன்மீகத் துறையில் மேலும் மேலும் ஏறிச்செல்லும் பக்தன் ஒருவன் ஐம்புலன்களையும், மனம், புத்தி முதலிய கரணங்களையும் ஒடுக்குவதையே இச்சொல் குறிப்பதாகும். இவ்வுண்மை கடோபநிடதத்தும் கூறப்படுகின்றது. இவ்வுண்மையே பகவத்கீதையிலும் கிருஷ்ண பரமாத்மா கூறிப்போந்தார்; அவ்விடத்திலே விதிக்கப்பட்ட விழிப்பு சாதாரண உலகத்தார்க்கு ஏற்படும் கண்விழிப்பு அன்று. ஆனுல், எம்மை நாளிலும் பொழுதிலும் அலைத்துக்கொண்டிருக்கும் ஐம்புல வேடர்மீது நாம் மேற்கொள்ள வேண்டிய விழிப்புணர்ச்சியாகும்.

## விரதம் என்பதன் பொருள்

கடைசியாக உபவாசம் என்பதனோடு தொடர்புற்ற 'விரதம்' என்னும் சொல்லை நோக்குவோம். இவ்விடத்தும் மக்கள் பெரும்பாலும் சாதாரண உபவாசத்தையே முக்கியமாகக் கொள்வர். அது தவறு. வடமொழியில் "உபவாசம்" என்னுஞ்சொல் எதைக் குறிக்கின்றதோ அக்கருத்தே "பிரத்தியாகாரம்" என்னும் சொல் யோகசாத்திரத்தில் குறிக்கின்றது. அதாவது, புறத்தேயுள்ள ஐம்புல நோக்கிலிருந்து எம்மனத்தையும் இந்திரியங்களையும் இறையை நோக்கித் திருப்பி விடுதலே உபவாசமாம். எனவே, 'உபவாசம்' என்பது கேவலம் ஊணொழிப்பு மட்டும் அன்று. உடல், உள்ளம் என்னும் இரண்டன் மூலமும் எம்மை இறைவனை நோக்கித் திருப்பி விடுதலாம்.

## சிவராத்திரி காலச்சிறப்பு

இவ்விரதம் கிருஷ்ண சதுர்த்தசி இரவில் அனுட்டிக்கப்படுவதொன்றும். அதாவது மாசி மாதத்து அபரபக்கத்துப் பதினுன்காம் நாளன்று அநுட்டிக்கப்படுவது. இவ்விரதம் சதுர்த்தசி இரவோடு சம்பந்தப்பட்டிருப்பதற்குரிய காரணத்தை "அமாவாஸ்யா" என்னும் சொல்லை ஆராயின் நன்கு விளங்கும். **அமா** என்னும் சொல்லும் **வஸ்** (வசி) என்னும் வினைமுதலும் **யா** என்னும் சாரியையும் சேர்ந்ததே அமாவாஸ்யா என்பது. இது "அமா" நிகழும் திதியைக் குறிப்பது. அதாவது சூரியனும் சந்திரனும் ஒருங்கு வாழும் தினத்தைக் குறிப்பது. இதுவே இலக்கண ரீதியாகவும், வானசாத்திர ரீதியாகவும் அமாவாசையின் தத்துவமாம்.

இதன் சிறப்பை ஆன்மீக நிலையில் நோக்குவாம். சூரியனும் சந்திரனும் முறையே பரமான்மாவையும் சீவான்மாவையும் குறிப்பன. அதாவது, சமாதி யோக நிலையில் பரமாத்மாவுக்கும் சீவான்மாவுக்கும் ஏற்படும் ஒருமைப்பாட்டைக் குறிக்கும் என்பர். இவ் விரதத்துக்கு இவ்விரவு விதிக்கப்பட்டதன் நோக்கம் யாதெனில் - சீவன் தன்வயமிழந்து சிவனிடம் தன்னை ஒப்புவித்து - ஆனுல், முழுவதும் சிவமயமாகாத நிலை எய்தும் இரவு இவ் விரவேயாம். இதுவே, சிவசாயுச்சியம் பெறுவதற்குரிய சிவோபாசனைக்குரிய "சுப-முகூர்த்த"மாம்.

## சிவராத்திரி விரதத்துக்குரிய விதிகளும் அனுட்டான நியமங்களும

ஈசானசம்ஹிதை சிவராத்திரி விரதம் எல்லா மக்களாலும் அனுட்டிக்கற்பாலதெனவும், அது பாபநாசத்தையும், பரமுத்தியையும் அளிக்கவல்லதெனவும் கூறும்.

ஸ்காந்தத்திலே எம்பிரான் கூறுவதாவது. "இத்தினத்தில் (சிவநிசியில்) பூரண உபவாசமிருப்பதன் மூலம் எனக்கேற்படும் மகிழ்ச்சி விசேட அபிஷேகங்களினுலோ, வஸ்திரம், தூபம், தீபாராதனை, மலர்கொடர்ச்சனை என்பவற்றினுலோ பெறப்படுவதில்லை."

ஈசுவர சம்ஹிதை கூறுவது:

"சைவனுயினும் சரி, வைணவனுயினும் சரி, வேறெத்தெய்வத்தை வழிபடுவோனுயினும் சரி, சிவராத்திரியை உதாசீனம் செய்வனேல், அவன் பூசனைகள் யாவும் நிஷ்பலமாம்.

சம்வத்சரப்பிரதீபம் என்னும் நூல் கூறுவதாவது:

சிவபிரானை நான்கு யாமங்களிலும் அபிடேகிக்கவேண்டும்.

முதலாம் யாமத்தில் இறைவனைப் பாலினுல் அபிடேகிக்க வேண்டும். இரண்டாம் யாமத்தில் தயிரினுலும், மூன்றும் யாமத்தில் நெய்யினுலும், நான்காம் யாமத்தில் தேனுலும் அபிஷேகம் செய்தல் வேண்டும்.

## விரதத்தின் மூவகை நியமங்கள்

(உபவாசம்-ஜாகரணம் (கண் விழிப்பு) அர்ச்சனை)

சிவரகஸ்யம் என்னும் நூலிலே கூறப்பட்டுள்ள நியமங்களாவன: வைகறையில் துயிலெழுதல், விதிப்படி ஸ்நானம், உபவாசமிருத்தல், பஞ்சாக்ஷரஜபம், ஆராதனை என்பனவாம். மணலினுல் செய்யப்பட்ட இலிங்கம் மிகச் சிறந்தது. ஸ்காந்தபுராணம் மேலும் கூறுவது:

சிவன் முதலாம் யாமத்தில் ஈசானன் என வணங்கப்படுகின்ருன். இரண்டாம் யாமத்தில் அகோரனுகவும், மூன்றும் யாமத்தில் வாமதேவனுகவும், நான்காம் ஜாமத்தில் சத்தியோஜாதனுகவும் வணங்கப்படுகின்ருன்.

சிவனைப்பூசிப்பதற்கு அங்கமாக இலிங்கபுராணம் பின்வருவனவற்றை விதிக்கின்றது:

"திருநீற்றைத் திரிபுண்டரமாகத் தரியாமலோ உருத்திராக்கமின்றியோ மகாதேவரைப் பூசித்தல் நிஷ்பலமாம்."

சிவபூசைக்கு வில்வத்தை உபயோகித்தல் சிறந்தது. விரும்பிய பேறுகளை அளிக்கவல்லதும், வறுமையை அழிப்பதும் ஆகிய வில்வ பத்திரங்களால் சங்கரன் மகிழ்வதுபோல் வேறெவ்வித பூசனையாலும் மகிழான்.

வில்வதளத்தின் பின்புறம் இலிங்கத்தைத் தொடக்கூடியதாக அர்ச்சிக்க வேண்டும். (ஏனெனில், வில்வதளத்தின் புறத்தில் இலக்குமி வாசஞ் செய்கின்றனள் என்ப.)

பூசனை முடிவில் சகஸ்ரநாம அர்ச்சனையும் அர்க்கியமும் கொடுக்கப்பட வேண்டும்.

அதன் பின்னர் பிரதட்சிணமும் நமஸ்காரமும் செய்யத்தக்கது.

தேவிபுராணம் பிரதக்ஷிணத்தைப்பற்றிப் பின்வருமாறு கூறும்:

வலம்வரும்போது ஏகாக்கிரசித்தம் உடையவராய், மும்முறை, வலமாயும் பின் இடமாயும் கோமுகையைத் தாண்டாது வலம்வருதல் வேண்டும்.

பூசனை முடிவில் சிவநிர்மால்யம் ஆகிய வில்வத்தைச் சிரசில் சூடவேண்டும். அங்ஙனம் செய்யின் சகல பாபங்களும் நீங்கும்.

## சிவராத்திரியுடன் தொடர்புள்ள சில வரலாறுகள்

புராணங்களிலே சிவராத்திரியுடன் தொடர்புற்ற பல்வேறு வரலாறுகள் உள. சங்கர சம்

(5-ம் பக்கம் பார்க்க)

# பெரியபுராணம்

புலவர் த. குமாரசாமிப்பிள்ளை, கொக்குவில்

(முற்றொடர்)

## திருநாட்டுப்படலம்

பல நாடுகளிலுமுள்ள பல அடியார்கள் வரலாறு கூறப்படினும், தாம் அமைச்சராயிருந்து செங்கோல் செலுத்திய நாடு, அறநெறி அரசுபுரியும் அனபாய சோழராசன் ஆட்சிபுரியும் நாடு, இந்நூலைப் பாடுதற்கு அடியெடுத்துக் கொடுத்தருளிய ஆனந்தக் கூத்தப்பெருமான் எழுந்தருளியிருக்கும் தில்லைத்தலம் விளங்கும் நாடு, ஆதலால், சோழநாட்டையே திருநாடாகக் கொண்டு அதன் சிறப்பைக் கூறுவாராயினர். கற்பனைகள் அலங்காரங்கள் ஏனைய புராணங்களிலும் சிறப்பாகக் கூறியிருப்பதுமன்றி, பிற்காலப் பெரியார், சேக்கிழார் பாடல்களில் சிறப்பாகக் கண்ட பெருமையைச் சொல்லும்போது "தெய்வம் மணக்கும் செய்யுளெலாம்" எனக் கூறினர். உதாரணமாக 2 செய்யுள்களும் கருத்தும் குறிப்பிடப்படுகின்றன.

"சாலிநீள் வயலினோங்கித் தன்னிகரின்றி மிக்கு
வாலிதாம் வெண்மையுண்மைக் கருவினும் வளத்தவாகிச்
சூன்முதிர் பசலைகொண்டு சுருள்விரித் தரனுக்கன்பர்
ஆலின சிந்தைபோல அலர்ந்தன கதிர்களெல்லாம்."

வயல்களில் நெற்பயிர்கள் வளர்ந்து கதிர்களைப் பரப்பின அன்பர் மனம்போல என்பது, மெய்யன்பர் சிந்தை சுத்தமான மெய்ஞ்ஞானமாகிய கருவினால் ஆகிய வளம் உடையதாய் எண்ணம் என்னும் நல்லுணர்வு முதிர்ந்து திருவருள் பதியப்பெற்று ஆறு அத்துவாக்களிலும் சுருள்கொண்டிருந்த நிலை நீங்கி விரியப்பெற்றுச் சிவபெருமானிடத்திலே பரந்து பதிந்து விளங்கும். அதுபோல நெற்பயிர்கள் வளர்ந்து நிமிர்ந்து சுத்தமாகிய வெண்மையமைந்த உண்மைக் கருவினாலாகிய வளம் உடையனவாய் கருமுதிர்ந்து பச்சை நிறங்கொண்டு சுருள்கள் விரிந்து கதிர்களை அலர்ந்தன.

"பத்தியின் பாலராகிப் பரமனுக் காளாமன்பர்
தத்தமிற் கூடினார்கள் தலையினால் வணங்குமாபோல்
மொய்த்தநீள் பத்தியின்பால் முதிர்தலை வணங்கி மற்றை
வித்தகர் தன்மைபோல விளைந்தன சாலியெல்லாம்."

சிவபெருமானுக்கு ஆட்பட்ட மெய்யடியார்கள் பத்தியின் வசப்பட்டவர்களாய் தங்களிற் கூடும்போது ஒருவரையொருவர் தலை தாழ்த்து வணங்குவதுபோல, நெருங்கிய வரிசையாய் நீண்ட பயிர்கள் கதிர் முற்றித் தலை வணங்கி நின்றன. கற்பனை, அலங்காரங்கள் கூறுமிடத்தும் சிவபெருமானையும் அடியார்களையும் நினைவூட்டி மெய்யடியார்கள் சிவனிடத்து வைத்திருக்கும் அன்பினையும் தங்களிற் கூடுங்கால் ஒருவரையொருவர் வணங்கும் இயல்பையும் கூறுதல் எவ்வளவு இன்பம் தருகின்றது. இந்த அநுபவம் பெற்ற பெரியோர் இதனாலேதான் தெய்வம் மணக்கும் செய்யுளெலாம் எனக் கூறினர் போலும்.

(தொடரும்)

## அகில இலங்கை சைவப்புலவர் சங்கம்

### 10 வது ஆண்டு நிறைவு விழா

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கம் தனது பத்தாவது ஆண்டு நிறைவை இவ்வாண்டு கொண்டாடுகிறது. சைவத்திலும், தமிழிலும் புலமை நிறைந்த புலவர்களையே அங்கத்தவர்களாகக் கொண்டுள்ளது. இச்சங்கம் தனது பத்தாவது ஆண்டு விழாத் திட்டத்தில் ஒன்றாக எதிர்வரும் சித்திரை மாத முற்பகுதியில் சைவசமயக் கலைப் போட்டிகளை நடாத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. சைவசமய நாடகப் போட்டி, சைவசமய நடனப் போட்டி, திருமுறைப் பண்ணிசைப்போட்டி, திருமுறை ஓவியப் போட்டி ஆகியவற்றை நடாத்தி, சிறந்தவற்றுக்குப் பரிசாக வெற்றிக் கேடயங்கள், தங்க மோதிரங்கள், பெறுமதி வாய்ந்த திருமுறை நூல்கள் முதலான ஆயிரம் (1000) ரூபா பெறுமதியான பரிசுகளை வழங்கவுள்ளது.

இப்போட்டிகள் அகில இலங்கை ரீதியாக நாட்டின் பல பாகங்களிலும் விரிந்த அடிப்படையில் நடைபெறவுள்ளன. இக்கலைகளைத் தொழிலாகக் கொண்ட ஸ்தாபனங்களைத் தவிர ஏனைய ஸ்தாபனங்கள், தனிப்பட்டவர்கள் யாவரும் கலந்துகொள்ளலாம். வேண்டிய பிற விபரங்களைச் சைவப் புலவர் சு. செல்லத்துரை, "பணி அமைப்பாளர்" சைவப்புலவர் சங்கம், இளவாலை. என்னும் விலாசத்திற் றொடர்புகொண்டு அறிந்துகொள்ளவும்.

சைவ சமயக் கருத்துக்களை நாடக, நடன, இசை, ஓவியத் துறைகளில் வளர்த்து இத்துறைகளில் ஈடுபாடுடைய கலைஞர்களை ஊக்குவித்துக் கௌரவிக்க வேண்டும் என்பதே இப் போட்டிகளின் நோக்கமாகும்.

**ஆசிரியர் குறிப்பு :-**

சைவக்கலை சமுதாயத்திற் செழிக்கவும், சைவக் கருத்துக்கள் தமிழ்மக்கள் உள்ளங்களில் அழுத்தந் திருத்தமாகப் பதியவும் இத்தகைய போட்டிகள் இன்றியமையாதவையாகும். இத்துறையில் ஆர்வங் கொண்டுழைக்கும் அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத்தின் நல்லூக்கமும் சிறந்த முன்மாதிரியும் பாராட்டுதற்குரியவை. இத்தகைய முயற்சிகளுக்குச் சைவகாவலனின் அன்பும், ஆதரவும், ஆசியும் என்றும் உரியவையாம்.

நாட்டிலுள்ள சைவ ஸ்தாபனங்கள் அனைத்தும் இம் முயற்சியை ஆதரிக்க முன் வரவேண்டும். இதுபற்றிப் புலவர்கள் சங்கம் 11-2-70 இல் விரிவான விளம்பரமொன்று வெளியிட்டுள்ளது. குறித்த போட்டிக்குரிய விதிவிபரங்கள் அவ்விளம்பரத்தின் மூலம் அறியப்படலாகும்.

## மகாசிவராத்திரி ........

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஹிதை பின்வருமாறு கூறுகின்றது: ஒரு முறை மத்தியார்ஜுன க்ஷேத்திரத்திலிருந்த ருத்திரர்கள் ஒருநாள் இரவு சிவனது ஏவலினால் விழித்தெழுந்தனர். அவர்கள் சிவபிரானை நான்கு யாமங்களிலும் பூசித்தனர். இறைவன் மகிழ்ந்து அவர்கள் முன் பிரசன்னமாகி அவர்களுக்கு வேண்டும் வரம் யாதென வினவினான். அவர்கள், "கருணாநிதியே! இத்தினத்தில் யாருன்னைப் பூசிக்கிறார்களோ அவர்கள் சிவராத்திரி விரதம் அனுட்டித்த பலனைப் பெறுவாராக" என்று வேண்டினார்கள்.

இரண்டாவது வரலாறு பின்வருமாறு: உருத்தி, மூர்த்தியோடு கொண்ட பகை காரணமாக தக்ஷன் தன் பெருமை நிலைமை யாவற்றையும் இழந்தான். அவன் பிரமதேவரை நாடித் தன் நிலையைக் கூறிய பொழுது அவர் கூறியதாவது, "பிள்ளாய், அவித்தையினால் ஏற்படும் இந்நிலைக்கு ஆளானவன் நீ மட்டுமில்லை. எனக்கும் முன்னர் இத்தகைய நிலை ஏற்பட்டதுண்டு. நான் அச்செம்பொருளை நாடினேன். அவர் என்னைத் துக்கத்திலிருந்து விடுவித்தார். ஆதலால், நீயும் அத்தேவதேவனை ஆராதனை செய்குதி" என்றார். பிரமதேவன் கட்டளைப்படியே தக்ஷனும் தன் பெயரால் காசியில் ஒரு சிவலிங்கத்தைத் தாபித்து விதிப்படி சிவராத்திரி விரதம் அனுட்டித்துத் தன் முன்னைய நிலை எய்தினான்.

மூன்றாவதாகப் பிரமதேவரும் திருமாலும் தம்முள் மாறுபட்டு யார் பிரமம என்று சமர் செய்த வரலாறு யாவரும அறிந்ததொனறு. இருவரும் போர் செய்துகொண்டிருககையில் நாரதர் அவர்கள் முன் தோன்றிக் குறிப்பால் எம்பிரான் ஒளி வடிவாய் வருதலை உணர்த்தினார். இருவரும் சோதியின் அடியையும் முடியையும் தேடிக்காணாது உண்மையுணர்ந்து அடங்கினர். அவர்கள் முன் இறைவன் சோதியாய்த் தோன்றிய இரவே சிவராத்திரி ஆகும்.

காசியைச் சேர்ந்த, வேடன் வேட்டைவிருப்பினனாய்க் கானகம் சென்றான். அங்கு ஒரு மரத்தடியில் களைமேலீட்டால் கணணயர்ந்தான். விழித்தெழுந்த பொழுது இருட்டிவிட்டது. கரிய இருளினாலும், வனத்தின் பயங்கரத்தன்மையாலும் தன்னிருப்பிடம் மீளமுடியாதவனானான். வன விலங்குகளுக்குப் பயந்து ஒரு வில்வ மரத்தின்மீதேறி இரவைக் கழித்தான், கண்ணயராதிருத்தற்காக அம்மரத்தின் இலைகளைப் பறித்துக் கீழே போட்டான்.

அதிஷ்டவசமாக அவனுக்கு ஐந்து விஷயங்கள் அவனை அறியாமலே புண்ணியத்துக்கேதுவாயின. (1) அவ்விரவே சிவராத்திரி, (2) அவனேறியது வில்வ மரம், (3) அம் மரத்தின் கீழ் சிவலிங்கம் இருந்தது, (4) அவன் அன்று முழுவதும் உணவே அருந்தவில்லை. (5) அது சிசிரருது ஆனமையின் வில்வதளங்கள் நீர் படிந்து சிவலிங்கத்தின் மேல் வீழ்ந்தன. சுருங்கக் கூறின், சிவராத்திரி விரதத்துக்கு வேண்டிய முக்கிய நியமங்கள் யாவும் அவ்வேடனால் அவனறியாமலே மேற்கொள்ளப்பட்டன. ஆதலின், அவன் தூயனாய் ஈற்றில் முத்தியுமடைந்தான்.

அங்ஙனமாக சமய அறிவு படைத்த நாம் உள்ளவாறு இவ் விரதத்தை அனுட்டிப்பின் எய்தும் பயன் சொல்லும் தரத்ததோ!

சுபம். சிவம்.

## வித்தியாரம்பம்........

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சொல்லிக்கொண்டு நாற்காயிலினின்று எழுந்தார். தானியேல் தலையை அசைத்துக் கொண்டு, "ஓ — ஓ — அதெல்லாம் எங்களுக்குத் தெரியும். நாங்கள் கவனமாகப் பார்த்துக் கொள்ளுவோம்; உமக்கு உத்தியோகத்துக்கு நேரமாகிறது, போய் வாரும்" என்று சொன்ன பதில் என் காதில் விழுந்தது. என் மனக்கலக்கத்தைச் சிறிது ஆற்றியது. பின்னர், ஐயாவும் போய்விட்டார்; நானும் போய் வகுப்பில் செல்லம்மாவுக் கருகில் உட்கார்ந்தேன்.

அப்போது எங்கள் வகுப்பை ஓர் உபாத்தியாயினி படிப்பித்துக் கொண்டிருந்தார். அவருக்கு அந்தக் காலத்தில் ஏறக்குறைய நாற்பது வயது இருந்திருக்கும் என நினைக்கிறேன். அவர் என்னை மிகவும் சாந்தமாகக் கூப்பிட்டுத் தன்னருகில் நிறுத்திப் பின் சில கேள்விகளைக் கேட்டு என்னைப் பரீக்ஷித்தார். முடிவில், அவர் என் முதுகிற் தட்டி, "கெட்டிக்காரி — நீ நன்றாய்ப் படிப்பாய்; உன்னிடத்திற் போயிரு" என்று என்னை உற்சாகப் படுத்தி அனுப்பி விட்டார்.

அப்புறம் உபாத்தியாயினி வகுப்பை நோக்கி, "அந்தப் பிள்ளையைப் பாருங்கள் எவ்வளவு துப்பரவாக இருக்கிறது. உங்களிற் சிலர் அசுத்தமாக இருக்கிறீர்கள். நீங்களும் அந்தப்பிள்ளையைப் போலச் சுத்தமாக வர வேண்டும்" என்றார். இப்படிச் சொல்லி வாய் மூடமுன் ஒரு பையன் சட்டென்று எழுந்து, "ஓம் வாத்தியார் ஓம். இது இன்றைக்குத்தானே புது ஆள். 'புதுமைக்கு வண்ணான் கரை கட்டி வெளுத்தது போல' இவவின் சுத்தம் எல்லாம் இரண்டு மூன்று நாளைக்குத்தான். இனிக் காலம் போகப் போகவெல்லோ கோலம் மாறுகிறதைப் பார்க்க வேணும்" எனறான். இவன் சிறுவனாக இருந்தாலும் இவனுடைய குயுக்தியைக் கண்டு நான் ஆச்சரியப்பட்டேன். அருகில் இருந்த செல்லம்மாவிடம் இவனைப் பற்றி நான் விசாரித்தபோது, அவள் "இவன் இப்படித்தான். இவன் பெயர் கந்தையா. இவனைக் 'கோமாளிக் கந்தையன்' என்று கூப்பிடுவது" எனப் பதில் உரைத்தாள். உபாத்தியாயினி சற்று நேரம் கோபத்தினால் அவனைப் பார்த்தவண்ணம் இருந்துவிட்டு, தன்னுடைய கட்டைப் பிரம்பைக் காட்டி, "கோமாளிப் பயலே! வாய் பொத்திக்கொண்டிரு. இனிமேல் இப்படி எதிர் வார்த்தை பேசினால், கட்டாயம் பிரப்பம்பழந்தான் கிடைக்கும்" என்று எச்சரிக்கை செய்து விட்டு; என்னைப் பார்த்து "மனோன்மணி! இவன் பார்த்து வெட்கம் அடையக்கூடியதாக நீ இதே போல எப்பொழுதும் துப்பரவாக வர வேண்டும்" என்றார். நான் அப்படிச் செய்வதாகப் புன்னகை புரிந்து தலை அசைத்துக் கொண்டேன்.

(தொடரும்)

## அன்பும் சிவபக்தியுமுடைய சந்தா நேயர்களே!

வணக்கம்

சில தவிர்க்கொணக் காரணங்களால் சைவகாவலனின் 10-ம் 11-ம் மலர்கள் சேர்ந்தொன்றாக வெளிவருகின்றன. மன்னிக்கவும்.

த. சிவலிங்கம்

## சித்தாந்தச் செந்நெறி

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

உலகம் உள்ள பொருளேதான் என்பது துணிபு.

விசிஷ்டாத் வைதத்தின் இக் கருத்தோட்டம் 'சத்கியாதி' என்று பெயர்பெறும். சத்கியாதி யாவது:— உண்மையில் எது உள்ளதோ அதுவே அறிவுக்கு விடயமாகும். உண்மையில் பொருள் ஒன்று இல்லாத நிலையில் அறிவு நிகழ்தல் என்பது நினைக்கவும் முடியாத ஒரு தன்மையாகும் என்பதே.

சாதரணமாக நிகழ்கின்ற ஐம்புலக் காட்சியில் சத்கியாதிக் கருத்துச் சரி வருதல் கூடும். ஆனல், கானல் நீர் போன்ற விபரீத உணர்வு என்று ஓர் அறிவுநிலை இருக்கிறதே; அதுவும் உள்பொருள் பற்றித்தான் நிகழ்கிறது என்று கூறுவதெங்ஙனம்? விபரீதமாக உணரப்பட்ட பொருள் அங்கிருந்ததில்லையே! என்பது இவ்விடத்தில் தோன்றும் ஆசங்கையாகும். அதற்குரிய இருவகை விளக்கங்கள் வருமாறு:—

உலகில் பொருள், தோற்றங்கள் எல்லாம் பஞ்சபூத மயமானவை. ஒவ்வோர் பொருளும் பஞ்சபூதக் கலப்புள்ளவை. எனினும், ஒரோவோர் பொருளில் ஒரோவோர் பூதப்பகுதி மிக அதிகமாக இருக்கும். அது பற்றி நாங்கள இது பிருதிவிப் பொருள், இது தேயுப் பொருள் என்று இங்ஙனம் அறிகிறேம். ஆயினும், அதே பிருதிவப் பொருளில் மற்ற நான்கு பூதங்களும் சிறுகச் சிறுக ஒரு குறிககப்பட்ட அளவில் இருந்தே தரும். அதே தேயுப்பொருளில் மற்ற நான்கு பூதமும் அவ்வாறே. மற்றும் பூதப் பொருள்களிலும் அங்ஙனமே. இவ்வியல்பு 'பஞ்சீகரணம்' என வேதாந்தத்திலும் ஒத்துக் கொள்ளப்பட்ட ஒன்றுகும். குறித்த கானல் நீர் உதாரணத்தில, கானல் நீர் என்று காணப்பட்டது, வெயில் மிகுதியால் தகிக்கப்பட்ட ஒரு மணல் வெளி. அது பிருதிவியை மட்டும் கொண்டுள்ளதன்று. அங்கே அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்பனவும் ஒரு குறிக்கப்பட்ட அளவில உள்ளனவே. ஆதலின, அங்கே தோன்றிய நீர்த் தோற்றம் இல்லாத பொருளின் தோற்றமென்று கொள்வதற்கில்லை. அது அங்குள்ள அப்பு — நீர் — சம்பந்தமான தோற்றமாதலின், அங்கும் அறிவுக்கு முனனிலையாக இருந்த பொருள் உள்பொருளேயாம். இந்த விபரீத உணர்வென்பது பூதநிலையில் வைத்துக் காணக் கூடிய இக்கானல் நீர்க் காட்சியளவில் முடிந்துவிடுவதில்லை. இப்பியை வெள்ளியாகக் காணுங் காட்சி இருக்கிறதே; அது எங்ஙனம் உள்பொருட காட்சியாகும்? என்பது அடுத்த கேள்வி. அதன் விளக்கம் வருமாறு:— இப்பிக்கும் வெள்ளிகுமிடையில் ஒரு பொதுத் தன்மையுளது. நிலவில் மினுமினுத்து விளங்கும் தன்மை இரண்டுக்கும் பொதுவாகும். ஆதலினல், இப்பி வெள்ளியாக அறியப்பட்ட அறிவு நிலையிலும் அப்பொதுத் தன்மை அறிவுக்கு முன்னிலையாக இருந்தே தீர்கின்றது. அன்றி, இல்லாத ஒன்று அறியப்பட்டதில்லை என்க. இது இங்ஙனமாக,

காமாலைக் கண்ணனுக்கு வெண்சங்கு மஞ்சள் சங்காகக் காணப்படும் நிலையிருக்கின்றதே; அவ்வறிவில் அறிவுக்கு முன்னிலையாக மஞ்சள் சங்கு இருந்ததில்லையே என்பது மற்றேர் ஆசங்கையாகும். அது பின்வருமாறு விளக்கப்படும். காமாலைக் கண் சங்கை நோக்கும்போது சங்கை நோக்கி அக்கண்ணின் மஞ்சள் ஒளி பாய்கின்றது. அவ்வொளி சங்கின் வெண்மையை மறைத்து விடுதலால் அக்கண்ணைப் பொறுத்த அளவில் அங்கே மஞ்சள் நிறமே அறிவுக்கு முன்னிலையாகின்றது. ஆதலின், அது கொண்டும், முன்னிலையாக ஒரு பொருள் இல்லாமல் அறிவு நிகழ்ந்ததெனச் சாதித்தல் கூடாதாகும். விஞ்ஞானரீதியாக இவ் விளக்கம் சரியோ பிழையோ என்பது வேறு விஷயம். ஆனல், இவ்விடத்து வேண்டப்படுவது குறித்த அறிதல் நிகழ்ச்சிக்கு விஷயமாக மஞ்சள் நிறம் இருந்தது என்னுமளவேயாம். இனி,

நாம் கனவின்கண் பலவேறு விஷயங்களைக் காண்கின்றேம். அந்நிலையில் அறிவுக்கு முன்னிலையாகப் பொருள் இருந்ததென்றல் எங்ஙனம் பொருந்தும்? என்பது அடுத்த கேள்வி. அதற்கு விசிஷ்டாத் வைதம் கொடுக்கும் விளக்கம் வருமாறு: சொப்பனத்திலே காணப்படும் புலி, பாம்பு, யானை முதலான பலவேறு பொருள்களும் காணப்பட்ட அத்தருணத்தில் உள்ள பொருள்களேயாம். ஆன்மாவின் நிலைகளில் கனவும் ஒரு நிலையெனவும், அங்கும் இறைவனுல் அநுபவம் நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றது என்றும் உபநிடதங்களால் அறிகின்றேம். [பிருகத். உபநிடதம் 4.3.10] விழிப்பு நிலையில் ஆன்மாவின் சுக துக்க அநுபவங்கட்கேற்றவாறு வெவ்வேறு பொருள்களை இறைவனே கொடுக்கின்றுன். கனவும் ஆன்மாவின் ஓர் அநுபவநிலையேயாதலின் அங்கும் அதன சுக துக்க அநுபவத்துக் கேற்றபடி பாம்போ, பூஞ்சோலையோ, வெள்ளையானையோ, இருட்டறையோ இறைவனுல அபப்பாதைக்கு அருளப்பட்டதேயாம். அதுவும் உயிரின் கர்மாநுபவத்தில் ஒரு பகுதியேயாம். 'கனவிலும் அவ்வவ் வுயிரின் தனியியல்புக் கேற்றவாறு இத்தகைய பொருள்களை இறைவன் சூக்குமமாக அருளுகினறுன். அவை பற்றிய அநுபவம் எய்தும்வரை அவற்றை நிலைக்க வைக்கின்றுன். அவ்வகையாற் குறிக்கப்பட்ட உயிர் செய்துகொண்ட மிக நுண்மையான புண்ணிய பாவங்களின் பலன் அநுபவித்துக் கழிக்கப்படுகின றது'— சுறீபாஷ்யம்.

இவ்வகையில், நிகழும் அறிவெல்லாம் உள்பொருள் பற்றியதே யன்றி இல்பொருள் அறிவு எவ்வாற்றுனும இல்லையாகும என விசிஷ்டாத் வைதத்தின் 'சத்கியாதி, என்னும் கொள்கையாற பிரஸ்தாபிக்கப்படுகின்றது. ஆகவே, ஞானம் அனைத்தும், விபரீதஞானம் உட்பட உள்பொருள் பற்றிய அறிவு நிகழ்ச்சியாதல் வெளிப்படை.

மேற்போந்தவாற்றல் உயிரிடத்தில் நிகழும் ஞானம் தர்மபூதஞானம் எனப் பெயர்பெறும். உயிரின் பந்தநிலையில் இந்த ஞானம் பலவித சம்சாரபந்தங்களின் இடையீட்டாலும் பிற ஏதுக்களினலும் பூரணமற்ற ஏகதேசஞானமாகவே இருக்கும். மோக்ஷ நிலையில் மட்டும் இத்தர்மபூத ஞானம் பரிபூரணமான ஞானமாய் ஒளிரும். அந்நிலையில் மட்டுமே உயிர் எதனையும் முற்றுக அறியவும் முடியும். எதனையும் இருந்தது இருந்தபடி அறிதலும் அந்நிலையிலேயே கைகூடும். இத்தர்மபூதஞானம் விசிட்டாத் வைதத்தில் திரவியமாகவும் குணமாகவும் எண்ணப்படுகின்றது. ஒருகாற் சுருங்கியும் ஒருகால் விரிந்தும் இது மாற்றத்துக் கிடமாயிருப்பதால் திரவியம் எனப்படும். இது ஒன்றில் சீவனில் அல்லது ஈஸ்வரனில் தங்கியிருப்பதன்றி தனியாக இருத்தலின்மையால் குணம் எனப்படும்.

(தொடரும்)

## கீரிமலை, ஸ்ரீ நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வர ஆலய

# மஹோற்சவம்

உலகத்துக்கு ஆதாரமாயுள்ள மகாமேருவின் சிகரம் மூன்றினுள் ஒன்றின் சிறுபாகம் வீழ்ந்த காரணத்தால் **ஈழதேசம்** (ஈழம்: பொன்) எனப் பெயர்பெற்ற இலங்காபுரியின் வடபாகத்தே விளங்கா நின்ற யாழ்ப்பாணத்திலே **மூர்த்தி, தலம், தீர்த்தம்** ஆகிய மூன்று விசேடங்களும் தன்னகத்தே ஒருங்கமையப் பெற்றுச் சங்கம சாகர தீர்த்தக் கரையிலுள்ளதும், **சுசங்கிதன், முசுகுந்தன், நளன், அருச்சுனன்** முதலிய **சக்கரவர்த்திகளாலும்**, நகுலமுனிவ ராதியோராலும் அர்ச்சிக்கப் பெற்றதும், பல நோய் நீக்கங்களோடு பாவ நீக்கத்திற்கு இடனுயதும், **மாருதப்புரவல்லியின்** குன்ம வலியையும், குதிரை முகத்தையும் நீக்கி, சிவக்ஷேத்திரங்கள் பலவற்றுள் **உத்தமமாகிப்** பிரசித்திபெற்றதும், **நகுலேஸ்வரம் — திருத்தம்பலேஸ்வரம் — வீணுபாணபுரம் — கீரிமலை** எனப் பல திருநாமங்கள் பெற்று விளங்குவதுமாகிய இப் புண்ணிய க்ஷேத்திரத்திலே எழுந்தருளி, மோக்ஷத்தைக் கொடுக்கும் பொருட்டு ஜோதிர்மய மஹாலிங்காவிர்ப்பூதராய் விளங்கும் **ஸ்ரீ நகுலாம்பிகா சமேத ஸ்ரீ நகுலேஸ்வர சுவாமிக்குக்** கீழே குறிப்பிட்டவண்ணம் மஹோற்சவம் நிகழும்.

### உற்சவ விபரம்

சௌமிய ஸூ மாசி மீ வாரம்

| | |
|---|---|
| 10 (21-2-70) சனி | காலை முதல் அங்குரார்ப்பணம், இரக்ஷா பந்நனம், பேரிதாடனம் முதலிய கிரியைகளும், பஞ்சமூர்த்திகளை எழுந்தருளப்பண்ணுதலும், மஹா துவஜாரோகணமும். இரவு: நவசந்தி ஆவாகனம். |
| 11 (22-2-70) ஞாயிறு | விநாயகர் உற்சவம். |
| 12 (23-2-70) திங்கள் | விநாயகர் உற்சவம். |
| 13 (24-2-70) செவ்வாய் | பகல்: விநாயகர் உற்சவமும், யாக அபிஷேகமும். இரவு: சுப்பிரமணியர் உற்சவம். |
| 14 (25-2-70) புதன் | சுப்பிரமணியர் உற்சவம். |
| 15 (26-2-70) வியாழன் | பகல்: சுப்பிரமணியர் உற்சவமும், யாக அபிஷேகமும். இரவு: மஹாயாக ஆரம்பம். |
| 16 (27-2-70) வெள்ளி | சந்திரசேகர பட்டமும், விருஷபாருடக் காட்சியும். |
| 17 (28-2-70) சனி | முத்துப் பல்லக்குக் காட்சி. |
| 18 ( 1-3-70) ஞாயிறு | விருஷப வாகனக் காட்சி. |
| 19 ( 2-3-70) திங்கள் | மூலமூர்த்திகளுக்குச் சந்தனக் காப்பும், மகேஸ்வர பூசையும், புஷ்ப விமானக் காட்கியும். |
| 20 ( 3-3-70) செவ்வாய் | கைலாச வாகனக் காட்சி. |
| 21 ( 4-3-70) புதன் | பிற்பகல் 3 மணிக்கு அம்பாள் தபசிருக்கத் தீர்த்தக் கரைக்குப் புறப்படுதல். மாலை 5 மணிக்குச் சுவாமி தீர்த்தக் கரைக்கு எழுந்தருளி மாலையிட்டுத் திருக்கல்யாண மண்டபத்திற்கு எழுந்தருளல். பின்னர் திருக்கல்யாணமும் புஷ்பப் பல்லக்குக் காட்சியும். |
| 22 ( 5-3-70) வியாழன் | மாலை 4 மணி: பிக்ஷாடன உற்சவம். இரவு: அஸ்வ வாகன உற்சவம். |
| 23 ( 6-3-70) வெள்ளி | காலை: பஞ்சமூர்த்திகள் இரதத்திற்கு எழுந்தருளி மங்கள வாத்தியங்களுடன் வீதிவலம் வரல். பிற்பகல் 4 மணி: விசேஷ அலங்காரமும் ஆராதனையும் நிகழ்ந்தபின் சுவாமி திருநடனத்துடன் யதாஸ்தானத்திற்கு எழுந்தருளல். இரவு இரதாரோஹண பிராயச்சித்தாபிஷேகமும், ஜோதிர்லிங்கத்திற்கு மஹாநியாச அர்ச்சனையும், சிவராத்திரி உற்சவமும். |
| 24 ( 7-3-70) சனி | உதயம்: சமுத்திர தீர்த்தம். பிற்பகல் 4 மணிக்கு மூர்த்திகள் விசேட அலங்காரத்துடன் யதாஸ்தானத்திற்கு எழுந்தருளல், மஹாயாக அபிஷேகமும், திருவூஞ்சலும், துவஜ அவரோஹணமும், சண்டிகேஸ்வரர் உற்சவமும், ஆசாரிய உற்சவமும். |
| 26 ( 9-3-70) திங்கள் | பகல்: சர்வ பிராயச்சித்தம். இரவு: க்ஷேத்திர பாலகருக்கு விசேஷ அபிஷேகமும் ஆராதனையும். |

### சந்தா நேயர்களுக்கு அறிவித்தல்

1. நிதிக் கஷ்டமின்றி சைவ காவலன் தொடர்ந்து கடமையாற்றச் சந்தா நேயர்கள் ஒவ்வொருவரும் குறைந்தது ஐந்து சந்தா நேயர்களைச் சேர்த்துதவுமாறு தாழ்மையுடன் வேண்டுகின்றேம்.
2. வருடச் சந்தா ரூபா 5/–ஐயும் பின்வரும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

த. சிவலிங்கம்
தலைவர்
அ. இ. சை. அ. பா. சபை
'விமலஸ்தான்' சுன்னுகம்.

# அது அந்தக்காலம் இது இந்தக்காலம்

— தம்பிசிவம் —

முற்றொடர்

புது. — ஏன் பண்டிதர், இந்த உலகம் இயற்கையாய் உள்ளதென்று ஏன் ஏற்றுக்கொள்ளக் கூடாது?

ப. — தம்பி நல்ல கேள்வி, இவ்வுலகம் இயற்கையாயுள்ளதெனின் இவ்வுலகத்திலுள்ளன யாவும் வேற்றுமையின்றி ஒரே தன்மையுடையனவாயிருத்தல் வேண்டும். வேற்றுமை இருப்பதெனக் காட்சிப் பிரமாணத்தால் அறிகின்றோம். அப்போ, அந்த வேற்றுமைக்கு ஏதோ காரணமிருக்க வேண்டும் என்பதைக் கருதற் பிரமாணத்தா லறிகின்றோம். அவ்வேற்றுமை தானாகவே ஏற்படமுடியாது ஆகையால், அவற்றிற்கு ஓர் கர்த்தாவும் இருக்க வேண்டுமென்பது வெளிப்படையாகின்றது.

புது. — தோற்றத்தில் மாத்திரம் வேற்றுமையல்ல. குணங்களிற் கூடப் பல வேற்றுமைகள் இருப்பதால் உலகம் இயற்கையாயுள்ளதென்ற கொள்கை பிழை என்பதை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன்.

அ. — நான் முன் சொன்னன் பண்டிதர், அவன் தம்பி தர்க்கரீதியிற் சரியென்றால் ஏற்றுக்கொள்ளுவான். மற்றும் கம்மியூனிஸ் கொள்கைக்காறரைப் போல அவன் மனக்கதவை இறுக்கிப் பூட்டி வைத்துக்கொண்டு ஒன்றை அறிய விரும்புவதில்லை. சரி, நீங்கள் சொல்லுங்கோ.

ப. — ஆண், பெண், மிருகம், பறவை, புல், பூண்டு முதலிய பொருகள் யாவும் அணுக்களால் ஆக்கப்பட்டவை. இவ்வுண்மை காட்சியால் புலப்படுகின்றது. விஞ்ஞான ஆராய்ச்சியாளர்களே இவ்வுண்மையை ஏற்றுக் கொண்டனர். ஆதலால், இந்த உலகம் அணுக்களிலிருந்து தோன்றியதென்பது கருதலாற் புலப்படும். இந்த அணுக்கள் பகுக்கக்கூடியன. அப்படிப் பகுக்கப்படும்பொழுது ஈற்றில் பகுக்கப்படாத ஒரு பொருள் வருமென்பது கருதலாற் புலப்படும். இதுதான் மாயை என்று சொல்லப்படுவது. மாயையென்றால் ஒடுங்கி விரிவது என்பது கருத்து. ஒடுங்குதலாவது காரியம் காரணமாதல். அதாவது காரியமாகிய உலகம் தான் தோன்றுவதற்குக் காரணமாகிய மாயை ஆதல். விரிதலாவது காரணம் காரியமாகுதல். அதாவது மாயை உலகமாகுதல். இதிலிருந்து உலகம் மாயையிலிருந்து தோன்றியதென்பது விளங்குகின்றது. ஆனால் அணுக்கள் தாமாகவே கூடி, அதாவது மாயை தானாகவே எப்படி வேற்றுமையுடைய ஒரு மனித வடிவத்தையோ, மிருக வடிவத்தையோ எடுக்க முடியும். அந்தப் பேதத்தை ஆக்கக் கூடிய வல்லமை அணுக்களுக்கில்லை. ஏனென்றால், அவை சடப்பொருள்கள். அவற்றை யாரோ சேர்த்து விடுதலினாலே பேதங்கள் விளைகின்றன. உதாரணமாகப் பிராணவாயுவும் ஜலவாயுவும் குறிக்கப்பட்ட அளவிற் சேர்க்கப்பட்டால் நீர் உண்டாகிறதல்லவா? உலகத்திலே காணப்படும் பொருள்கள் ஒவ்வொன்றும் கலப்பினால் வேறு வேறானவைகளாய்த் தோன்றியே ஆண், பெண், மிருகம், பறவை முதலிய பேதங்களை உண்டாக்கின. ஆகையால், இந்தப் பேதங்களை உண்டாக்கும் வல்லபம் வேறொரு பொருளிலிருந்து வர வேண்டும். அந்தப்பொருள் இந்த அணுக்களை ஆளும் வல்லமையுடையதாயும் இருக்க வேண்டும். அந்தப் பொருளுக்கு ஓர் பேர் வேண்டும். அது தான் கடவுள். கடவுளென்றால் எல்லாப் பொருட்களைக் கடந்தும் அவற்றுள் நின்றும் இயங்குமோர் சக்தி.

அ. — பண்டிதர் நீங்கள் சொல்வது சரிதான். ஆனால், கொஞ்சம் கடுமையாய்ப் போச்சு. வேறு சாதாரணமான உதாரணங்களால் விளக்கப்படுத்தினால் நல்லது.

புது. — ஓம் பண்டிதர். உது கடுஞ் சித்தாந்தமாய்ப் போச்சு எனக்கு.

ப. — சரி. ஒரு சிறு உதாரணத்தால் விளங்கப்படுத்துகிறேன். ஒரு மண் பானையை எடுத்துக் கொள்ளுவோம். அதை ஆக்குவதற்கு மண்ணும், நீரும், நெருப்பும் சில உபகரணங்களும் வேணும் என்பதைக் காட்சிப் பிரமாணத்தால் யாவரும் ஏற்றுக்கொள்ளுவர். இவை யாவும் தாமாகவே தொழிற்பட்டுக் குடமாகுமோ? இல்லை. இவையைச் சேர்த்துக் குடமாக்குவதற்கு இவற்றை ஆளக்கூடிய ஒருவன் வேணுமென அறிகின்றோம். அவன்தான் குயவன். இதுபோலவே மாயையிலிருந்து உலகப் பல்வேறு தோற்றங்களுடன் தோற்றுவதற்குக் கர்த்தாவாக அவற்றை ஆளக்கூடிய சக்தியுடைய ஒருவர் இருக்க வேண்டும். அவர்தான் கடவுள் எனக் கருதற் பிரமாணத்தால் அறிகின்றோம். அவர் பலவேறு நாமங்களால் அழைக்கப்படலாம்.

புது. — இப்ப எனக்கு நல்லாய் விளங்குது. தர்க்கரீதியில் கடவுள் ஒருவர் இருக்க வேண்டுமென்பதை ஏற்றுக்கொள்ளுகின்றேன். அப்பேர்ப்பட்டவரை ஆராகிலும் கண்டார்களோ?

ப. — அவரைக் கண்டவர்கள் அனேகர் தம்பி. பெரிய புராணம், திருவிளையாடற் புராணம் முதலியன அவரைக் கண்டவர்களின் சரித்திரங்களையே கூறுகின்றன.

புது. — உந்தப் பழைய கதைகள் வேண்டாம் பண்டிதர். கிட்டடியிற் கடவுளைக் கண்டவர்கள் ஆரேன் இருக்கினமோ? இல்லையென்றால் உந்தப் புத்தகக் கதைகளை நான் நம்பமாட்டேன்.

ப. — தம்பி இங்கே வாரும். உம்முடைய முதுகில் ஏதாகிலும் அடையாளம் இருக்கா?

புது. — ஓம் ஒரு மறையிருக்கிறது.

ப. — அதை நீர் அப்போது குனிந்து ஏதோ எடுக்கும்போது நான் கவனித்தேன். அந்த மறையை நீர் கண்டீரோ?

புது. — இல்லை.

ப. — அப்படியென்றால் அந்த மறை இருப்பது உமக்கென்னென்று தெரியும்?

புது. — அதைக் கண்டவர் ஒருவர் சொல்ல நான் அதை அறிந்தேன்.

ப. — அப்ப நீர் காணாத ஒன்றைக் கண்டவர் ஒருவர் சொல்ல நம்புகின்றீர். சரி உம்முடைய தகப்பனார் பெயரென்ன?

புது. — கார்த்திகேசு.

ப. — கார்த்திகேசுதான் உமது தகப்பன் என்று உமக்கு என்னென்று தெரியும்?

புது. — அம்மா சொன்னவ அவர் தான் என்னுடைய தகப்பனென்று.

ப. — நீர் காணாத ஒன்றை அம்மா சொல்ல நம்புகின்றீர். அதுபோலக் கடவுளைக் கண்டவர்கள் சொல்ல ஏன் நம்பமாட்டேன் என்று பிடிவாதம் பண்ணுகின்றீர்?

புது. — உது புத்தகக் கதை பண்டிதர். உதை நான் நம்பமாட்டேன்.

ப. — சரி, நீர் பூமிசாத்திரம் படித்தீரல்லவா? அதிற் பூமி உருண்டை வடிவம் என்றும், இங்கிலாந்து என்று சொல்லப்படும் தேசம் ஒன்று இருக்கென்றும் படித்ததை நீர் நம்பவில்லையா?

புது. — அதெல்லாம் நான் நம்புகின்றேன்.

ப. — தம்பி, அவையெல்லாம் ஆரோ புத்தகத்தில் எழுதி வைத்த உண்மைகள்தானே. அதுபோலத்தான் கடவுளைக் கண்ட நாயன்மார்களின் சரித்திரங்களைக் கூறும் புராணங்களிற் கூறப்பட்டவற்றையும் நம்ப வேண்டும்.

புது. — பண்டிதர் தர்க்கரீதியில் நீங்கள் சொன்னது எல்லாம் சரி. எங்கள் தோழன் எனது மனதைப் பழுதாக்கிப்போட்டார். அவரின் ஆதாரமற்ற சொல்லுகளை மறந்து கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பதை முற்றாக நான் இப்போ நம்புகின்றேன். அம்மான், நேரமென்ன?

அ. — தம்பி நேரமும் ஒரு மணியாய்விட்டதடா. கதையிலை நேரம் போனதும் தெரியவில்லை.

புது. — நான் மாட்டுக்கேதேன் தேடவேணும், வரப்போறன்.

ப. — தம்பி கொஞ்சம் பொறுத்துக் கொள்ளும். கடவுள் இல்லையென்ற உங்கள் கொள்கை பிழையென இப்போ நிரூபித்துள்ளேன். இனிச் சம உரிமைக் கொள்கையைப் பற்றிச் சொல்லுகிறேன் கேளும்.

புது. — நான் போகவேணும் பண்டிதர். இன்னொரு நாளைக்கு நாங்கள் இங்கே சந்திப்போம். உங்களிலை நல்ல சரக்கு இருக்கு. நாங்கள் கேட்டு அறிந்துகொள்ளுவம்.

## சமஸ்கிருத அர்ச்சனை....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிரம் முதலிய மந்திரங்கள் பல; அத்தனையும் சைவானுட்டானத்துக்கு அவசியம் வேண்டற்பாலனவாகும்.

பிரதிட்டை, அட்டபந்தனமாதியன ஒரு பகுதி; தீக்ஷை, விவாகம், அந்தியேட்டி, சிராத்தம் ஆதியன மற்றோர் பகுதி, அவை வேதாகமத்திற் சொல்லப்பட்ட சைவக் கிரியைகள், மந்திரம், பாவனை. கிரியையில்லாத சைவமில்லை, அம்மூன்றும் ஒன்றையின்றி யொன்றில்லை. ஒன்று மாறினால் மற்றவையும் மாறும். அக்கிரியைகளையும் தமிழிற் பெயர்க்க முடியுமா?

இன்னும், ஏகாட்சரம், பஞ்சாட்சரம், ஷடாக்ஷரம் முதலியன எண்ணடியாகப் பிறந்த பெயர்கள். அவற்றைத் தமிழிற் பெயர்க்க அப்பெயர்ப்புக்களை விட்டு அப்பெயர்கள் விலகும் அதற்கென் செய்வது. இன்னும், பத்தாந் திருமுறையில் திருவம்பலச் சக்கரமாதிய பல சக்கரங்கள் சொல்லப்பட்டுள்ளன. அவற்றில் அப்பெயர்ப்பு மந்திரங்களின் எழுத்துக்கள் அடங்குமா? சக்கரங்களையும் மாற்றி அமைக்க வேண்டுமா? அத்திருமுறையில்,

> ''இட்ட விதழ்களிடை
> யந்தரத்திலே
> யட்ட அவ்விட்டதின் மேலே
> உவ்விட்டுக்
> கிட்ட இதழ்களின் மேலே
> கிரோம் கிறோம்
> இட்டு வாமத்திற் கிறோங்
> கென்றுமேவிடே''

என்று வருகிறது. இவ்விதமாகிய பாடல்கள் பலவற்றிலுள்ள மந்திரங்களெல்லாம் சம்ஸ்கிருதமே. திருமூலநாயனார் அவைகளை அப்படியே தந்தார். அவற்றுள் ஒன்றையாவது தமிழில் பெயர்க்கவில்லை. அவைகளை அப்படியே ஓதவேண்டுமென்பது அவர் கட்டளை. அதனாற்றான் அத்திருமுறை திருமந்திரமென்றாயிற்று.

திருமந்திரத்தில் அர்ச்சிக்கும் முறையைக் கூறுமிடத்தில், ''நீதங்கு மங்கநியா சந்தனைப் பண்ணி'' எனவும், ''ஆசற்ற கத்தினிலாவாகனம் பண்ணி'' எனவும், ''பேசிப் பிராணைப் பிரதிட்டை செய்து'' எனவும், ''மேதாதியீரெட்டு மாகிய மெல்லியல்'' எனவும்,

> ''தொகைநின்ற நேத்திர
> முத்திரை சூலம்
> பகைநின்ற யோனி
> வகுத்ததுமாமே''

இவை போன்ற மற்றும் கிரியைகளையும் வகுத்துக் கூறியருளினார்; இவைகளின் விரிவுகளெல்லாம் சிவாகம வழிப்பட்டனவேயாம்.

மேலும், தத்துவப் பிரகாசமென்னும் நூலிலும் மந்திரங்களினந்தமாகிய, சுவாகா, நம, வஷட், வௌஷட், சுவதா, உம், பட் என்பவற்றைக் கூறிற்று.

(தொடரும்)

# கந்தபுராணம்

சி. நாகலிங்கம், தெல்லிப்பழை

அகில இலங்கை சைவானுட்டான பாதுகாப்புச் சபையாரின் வேண்டுதலுக்கிணங்க, பரம கருணாநிதியாகிய சிவபெருமானுக்குரிய காந்தபுராணத்தாறு சங்கிதைகளுட் சங்கர சங்கிதையின் முதற் கண்டமாகிய சிவரகசிய கண்டத்திலுள்ள கந்தசுவாமியின் செய்யுள் நடையிலுள்ள சரித்திரத்தை வசனநடையாகச் சைவப் பெருமக்கள் பயன்பெறுவார்கள் என்ற நோக்கத்துடன், திருவருட்டுணையுடன் எழுதுகிறேன். இதில் உள்ள குற்றங்களை, தமிழ்நூல்களை ஓதியுணர்ந்த அறிஞர், இது நன்குடையதேயாமென்று இகழார். இம்மையிலின்பம் பெற்றுப் பின் சிவலோகஞ் சேர்வர்.

## சிவபுராண படனவிதி

அநாதி முத்த சித்துருவாகிய முழுமுதற் கடவுள் சிவபெருமானே என்று துணிந்து, வேத சிவாகம விதிப்படி மெய்யன்போடு வழிபடுவோர் சைவசமயிகள் என்றும், சிவனடியார்கள் என்றுஞ் சொல்லப்படுவர். இச் சைவர்கள் பல சமயத்தாருக்கும் பொது வகையால் வேண்டப்படும் இலக்கணங்களை முன்னே வழுவாது தழுவிக்கொண்டு, பின்பு தங்களுக்குச் சிறப்பு வகையால் வேண்டப்படும் இலக்கணங்களை உடையவர்களாய ஒழுகல் வேண்டும்.

**பொதுவிலக்கணங்கள்:-** கொல்லாமை, புலாலுண்ணாமை, கள்ளுண்ணாமை, பிறாமனை நயவாமை, வரைவன மகளிர் நயவாமை, இரக்கம், வாய்மை, பொறை, அடக்கம், கொடை, தாய்தந்தை முதலிய பெரியோரை வழிபடுதல் முதலிய நன்மைகளாம். இந்நன்மைகளில்லாத கிரியை ஞானங்கள் சிறிதும் பயன்படாவாம்.

**சிறப்பிலக்கணங்கள்:-** புறத்திலக்கணம், உடலிலக்கணம், அகத்திலக்கணம் என மூவகையின. அவற்றுள் புறத்திலக்கணம் பத்து; உடலிலக்கணம் பத்து; அகத்திலக்கணம் மூன்று; ஆகச்சிவனடியாரின் சிறப்பிலக்கணம் இருபத்து மூன்று.

**புறத்திலக்கணம் பத்தாவன:-** குருமூலமாகச் சைவ சமயப் பிரவேசஞ் செய்து, விபூதி, உருத்திராக்ஷம் என்னும் சிவ சின்னங்களைத் தரித்தல், குருவை வழிபடல், சிவபெருமானைத் தோத்திரஞ் செய்தல், சிவநாமங்களை உச்சரித்தல், சிவபெருமானைப் பூசைசெய்தல், சிவதருமங்களைச் செய்தல், சிவபுராணங்களைக் கேட்டல், சிவாலயதரிசனஞ் செய்தல், சிவனடியாரிடத்தன்றிப் பிறரிடத்துப் போசனம் பண்ணாமை, சிவனடியார்களுக்குக் கொடுத்தல் என்பவைகளாம்.

**உடலிலக்கணம் பத்தாவன:-** சிவபெருமானுடைய பெருமையைச் சிந்திக்குந்தோறும் கண்டம் விம்முதல், நாக்குத் துடித்தல், உதடு துடித்தல், சரீரம் நடுங்குதல், உரோமஞ் சிலிர்த்தல், குறுவியர்வைகொள்ளல், நாக்குத் தழுதழுத்தல், ஆனந்தக்கண்ணீர் சொரிதல், வாய்விட்டழுதல், பரவசமாய்த் தன்னை அயர்த்தல் என்பவைகளாம்.

**அகத்திலக்கணம் மூன்றுவன:-** பஞ்சாட்சரத்தை மானசமாகச் செபித்தல், மானதபூசை சிவபெருமானைத் தன்னோடு பிரிவறக் காண்டல் என்பவைகளாம்.

இவ்விருபத்துமூன்று சிறப்பிலக்கணங்களுள் ஒன்றாகிய சிவபுராணம் ஓதல், கேட்டல்தான் ஓரிலக்கணமாய் நிற்றலன்றித் தன்னையுந் தன்னையொழிந்த சிறப்பிலக்கணங்களையும், மற்றைப் பொதுவிலக்கணங்களையும் வருவித்தற்குக் கருவியாயும் நிற்றலுடையது. யாதினாலெனின், விபூதி உருத்திராக்ஷதாரணம் முதலிய புண்ணியங்களையும் அவற்றின் பயனாகிய இன்பத்தையும்; கொலை முதலிய பாவங்களையும் அவற்றின்பயனாகிய துன்பத்தையும் அறிவிப்பது சிவபுராணமாகலினென்க. ஆதலால், சைவசமயிகள் யாவரும் சிவ்புராணம் ஓதல், கேட்டல் வேண்டுமென்பது துணிவு.

புராணங்கள் பதினெட்டு; அவைகளில் சைவ புராணம், பவிடிய புராணம், மார்க்கண்டேய புராணம், இலிங்கபுராணம், காந்த புராணம், வராகபுராணம், வாமனபுராணம், மற்சபுராணம், கூர்மபுராணம், பிரமாண்டபுராணம் என்னும் பத்துஞ் சிவபுராணங்களாம்.

காருடபுராணம், நாரதீய புராணம், வைணவபுராணம், பாகவதபுராணம் என்னும் நான்கும் விட்டுணு புராணங்கள்.

பிரமபுராணம், பதுமபுராணமென்னுமிரண்டும் பிரமபுராணங்கள்.

ஆக்கினேயம் ஒன்று அக்கினி புராணம்.

பிரமகைவர்த்தம் ஒன்று சூரியபுராணம்.

சிவபுராணம் பத்தும் சாத்துவிகங்களாம். சத்துவகுணம் வெண்ணிறமுடையதும் சுகத்துக்கும் ஞானத்துக்கும் இடமுமாம். யோகிகளுக்கு ஞானம் உபதேசிக்கும் சிவபெருமான் தெளிபளிங்கு வடிவினராய் எங்குமுறங்காது பிராமணாதிபதியாயிருப்பர்.

விட்டுணு புராண நான்குந் தாமசங்களாம். தமோகுணம் கருநிறமுடையதும் உதாசீனரூபமும் கூடகிருத்திய சமர்த்தமுமாம். நித்திரை, சோம்பு, பிரமாதம், வஞ்சனம் முதலியவைகள் தாமசங்கள். விட்டுணு சூரியரும் சேஷசயனஞ் செய்பவரும் பக்தரை மோகிப்பவருமாயிருப்பர்.

பிரமபுராணம் இரண்டும் இராசசங்களாம். இரசோகுணம் சிவந்த நிறமுடையதும் துக்கத்துக்கிடமும் சஞ்சலரூபமுமாம். பிரமா செந்நிறமுடையராய்ச் சஞ்சல ரூபியாயிருப்பர்.

அக்கினிபுராணமும், சூரிய புராணமும் திரிகுணயுத்தமாம். அக்கினியும் சூரியனும் முக்குண வடிவினராயிருப்பர்.

ஆதலால், இப்பதினெட்டினுள்ளும் சிவபுராணங்கள் பத்துமே உயர்ந்தனவாம். ஆகையாற் சிவனடியார்கள் சிவபுராணங்களையே விதிப்படி மெய்யன்போடு ஓதவுங் கேட்கவுங் கடவர்கள்.

சிவபுராணம் ஓதிப் பொருள் சொல்லுதற்குரிய இடங்களாவன தேவாலயம், திருமடம், தீர்த்தக்கரை, குளக்கரை, திருநந்தவனம், யாகசாலை முதலிய சுத்தஸ்தானங்களாம்.

சிறியோர் கள் களிக்குமிடத்திலும், சூதாடுமிடத்திலும், உண்டாட்டுச் செய்யுமிடத்திலும், அறிவில்லாதவரிருக்கு மிடத்திலும் புராணம் ஓதலாகாது.

திருக்கோயிலிலே சிவபுராண மண்டபஞ் செய்வித்து, அதிலே சிவபுராணப் புத்தகத்தைப் பீடத்தின் மீது வைத்து, நாடோறும் விதிப்படி பூசை செய்துகொண்டு வரின், அது கோடி சிவலிங்கப் பிரதிட்டைக்குச் சமமாகும். சிவபுராணம் படித்துப் பொருள் சொல்லுவதற்கு அதிகாரிகளாவார்:- அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்னும் நான்கு வருணத்துட் பட்டவராய், நல்லொழுக்கமுடையவராய், உடற் குற்றங்களில்லாதவராய், நிகண்டு கற்று, இலக்கியவாராய்ச்சி செய்து, இலக்கண நூலிற் பயின்றவராய், நீதி நூல்களையும் சைவ நூல்களையும் ஓதியுணர்ந்தவர்களாய், சந்தியாவந்தனம் சிவபூசை முதலிய நித்திய கருமங்களைத் தவறாமல் விதிப்படி சிரத்தையோடு செய்பவராயுள்ளவர்.

சிவபுராணஞ் சுபதினத்திற் சுபமுகூர்த்தத்தில் ஆரம்பித்தல் வேண்டும். ஆரம்பிக்குந் தினத்தினும் முடிக்குந் தினத்தினும், திருக்கல்யாண முதலிய சுபசரித்திரங்கள் படிக்குந் தினங்களிலும் சிவபுராண மண்டபத்தைக் கோமயத்தினாலே திருமெழுக்கிட்டுக் கமுகுகளையும், வாழைகளையும, கரும்புகளையும் நாட்டி; கொய்யப்பட்ட பட்டுக்களையும், பூமாலைகளையுந் தூக்கி அலங்கரித்தல் வேண்டும். சிவபுராண போதகர் நாடோறும் ஸ்நானஞ்செய்து, தோய்த்துலர்ந்த வஸ்திரமிரண்டு தரித்துச் சந்தியா வந்தனமுஞ் சிவபூசையும் முடித்துக்கொணடு, சிவபுராண புத்தகததைப் பீடத்தின்மீது வைத்துச் சந்தனம் புட்பம், தூபம், தீபம் முதலியவற்றினாலே பூசைசெய்து நமஸ்காரம பண்ணி, ஆசனத்திருந்துகொண்டு புராணம் போதித்தல் வேணடும். அவர் அங்கே யாரையும் அஞ்சலி செய்தலாகாது.

சிவபுராணங் கேட்போர் நாடோறும் ஸ்நானஞ்செய்து, தோய்த்துலர்ந்த வஸ்திரந்தரித்து, நித்திய கருமம்முடித்துக்கொணடு புத்தக பூசை முற்றியவுடன் சிவபுராண போதகரைக் கிழக்கு முகமாக ஆசனத்திருத்திச் சிவபெருமானாகப் பாவித்துச் சந்தனம், புஷ்பம் முதலியவைகளினாலே பூசித்து நமஸ்காரஞ் செய்து சுற்றத்தார்களோடும் சித்திரப் பாவைபோல அசைவற மௌனமாக இருந்து, மெய்யன்போடு கேட்டுக்கொண்டு மீட்டும் நமஸ்காரஞ் செய்தல் வேண்டும். நாடோறும் புராணந் தொடங்கும்போதும், முடிக்கும்போதும் காப்புச் சொல்லல் வேண்டும். காப்புக்கு முன்னும் பின்னும் "திருச்சிற்றம்பலம்" என்று உச்சரித்தல் வேண்டும். காப்புச் சொல்லும்பொழுது யாவருங் கும்பிட்டுக் கொண்டிருத்தல் வேண்டும்.

புராணம் வாசிப்பவர் சபையார் யாவரும் கேட்கும் பொருட்டுத் தெளிவுபெற வாசித்தல் வேண்டும். வாசிக்குங் காலத்துக்கும் எடுத்துக்கொண்ட விஷயத்தினது குணத்துக்கும் ஏற்ற இராகத்தில் வாசித்தல் வேண்டும். எச்சுதியில் எவ்விராகத்தில் வாசிக்கப்படுகின்றதோ அச்சுதியில் அவ்விராகத்திற்றானே பொருள் சொல்லப்படல் வேண்டும். இலக்கணப் பிழையில்லாமலும், வெளிப்படையாகவும், இன்றியமையாதவிடங்களில் விரிவாகவும், பொருள் சொல்லப்படல் வேண்டும். சிவபுராண போதகரைச் சிவபெருமானாகப் பாவியாது மனுஷராகப் பாவிப்போரும், சிவபுராணம் படிக்குஞ் சபையிலே உயர்ந்த ஆசனத்திருப்போரும், காலை நீட்டிக்கொண்டிருப்போரும், சயனிப்போரும், நித்திரை செய்வோரும், வெற்றிலை பாக்குண்போரும், உடம்பு போர்த்துக் கொள்வோரும், பிறவார்த்தைகளைப் பேசுவோரும், குதர்க்கஞ் செய்வோரும், பொறாமையினாலே பிறிதுபொருளைக் கற்பிப்போரும், அன்பின்றிக் கேட்போரும், சிரிப்போரும், இடையில் எழுந்து பிறிது கருமத்திலே செல்வோரும், புராணத்தைப் பொய்யென்போரும் நெடுங்காலம் நரகங்களிலே கிடந்து துன்பம் அனுபவித்துப் பின்பு இழிவாகிய பிறப்புக்களிலே பிறந்து வருந்துவார்கள்.

சிவபுராணத்தை முதற்றொடங்கி முடிவுவரையும் இடைவிடாது நியமமாகக் கேட்டல் வேண்டும். தினந்தோறும் ஒவ்வொரு சிவபக்தருக்கு அன்னங் கொடுத்தல் வேண்டும். புராணம் ஆரம்பித்த காலத்தினும், திருக்கல்யாணம் முதலிய சுபசரித்திரங்கள் படித்த காலங்களினும், காண்டங்கள் முடிந்த காலங்களினும், புராணம் முடிந்த காலத்தினும் சிவனடியார்களுக்கும், பிராமணர்களுக்கும் இயனறமட்டும் அன்னதானஞ் செய்து, புராண போதகருக்குப் பூசைபண்ணி வஸ்திரம் ஆபரணம் முதலியவை கொடுத்தல் வேண்டும். புராணம் முடிந்தபின், புராணத் திருமுறையையும் போதகரையும் மங்கல வாத்தியங்கள் ஒலிக்க வீதிவலஞ் செய்வித்தல் வேணடும்.

சிரத்தையோடு சிவபுராணப் புத்தகத்தை எழுதிச் சிவனடியார்களுக் கொடுத்தவரும், எழுதித் தம் வீட்டில் வைத்துப் பூசை செய்தவரும், அத்றகுப் பொருள் சொன்னவரும், அதனைக் கேட்டவரும் சிவபதத்தை அடைவர்.

சகல வேதாந்தங்களின் சாரத்தையும் உளளடக்கினதாய் ஐமபது கண்டங்களாற் புனையப்பட்டதாய் ஓரிலக்கங் கிரந்தமுடைத்தாயிருக்குங் காந்த புராணமானது சனற்குமார சங்கிதை, சூத சங்கிதை, பிரமசங்கிதை, சங்கர சங்கிதை, சூரசங்கிதை, விட்டுணுசங்கிதை என ஆறு சங்கிதையுடையது. அவற்றுள் சனற்குமாரசங்கிதை ஐமபத்தையாயிரங் கிரந்தமும், சூதசங்கிதை ஆறாயிரங் கிரந்தமும், பிரமசங்கிதை மூவாயிரங் கிரந்தமும், சங்கரசங்கிதை முப்பதினாயிரங் கிரந்தமும், சூரசங்கிதை ஆறாயிரங் கிரந்தமும், விட்டுணுசங்கிதை ஐயாயிரங் கிரந்தமுமுடையன. முப்பதினாயிரங் கிரந்தமுடைய சங்கர சங்கிதை பன்னிரண்டு கண்டமுடையது. அவற்றுள் முற்பட்டது சிவரகசிய கண்டம்.

அது பதின்மூவாயிரங் கிரந்தமுடையதாய், சம்பவகாண்டம், அசுரகாண்டம், மகேந்திரகாண்டம், யுத்தகாண்டம், தேவகாண்டம், தக்ஷகாண்டம், உபதேச காண்டம் என ஏழு காண்டங்களையுடையதாயிருக்கும். அவற்றுள் முதலாறு காண்டத்தையும், கச்சியப்பசிவாசாரிய சுவாமிகள் கந்த புராணமெனப் பெயரிட்டுத் தமிழில் அருளிச் செய்தனர். ஏழாவதாகிய உபதேச காண்டத்தை, கோணேரியப்ப முதலியார் தமிழில் அருளிச் செய்தனர்.

நூலாசிரியர் சரித்திரம் மறுமலரில்

பத்திராதிபர் சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள், அச்சுவேலி. நல்லூரில் வசிக்கும் திரு. சின்னத்தம்பி சுப்பிரமணியம் அவர்களால் யாழ்ப்பாணம் ஸ்ரீ சண்முகநாத அச்சகத்தில் 15-2-70இல் அச்சிட்டு சுன்னாகத்தில் வசிக்கும் அகில இலங்கைச் சைவ அனுட்டான பாதுகாப்புச் சபைத் தலைவர் திரு. த. சிவலிங்கம் J. P. அவர்களால் வெளியிடப்பட்டது.